தரம் 6-9

மாணவர்களுக்கான

# பொது கட்டுரைகள்



டி. ஜெகநாதன் (ஜெக்கி)

## தரம் ௬–௯

## *மாணவர்களுக்கான*

# பொது கட்டுரைகள்




**ஆக்கம்**

**ம.ஜெகநாதன் (ஜெக்கி)**

# நூல் விபரம்

**நூலின் பெயர்:** தரம் 6-9 மாணவர்களுக்கான பொது கட்டுரைகள்

**ஆக்கம்:**
**நூல் வடிவமைப்பு:**
**அட்டை வடிவமைப்பு:** ம.ஜெகநாதன்

**கணனி தட்டச்சு:**
**ஒப்பு நோக்கல்:** திருமதி.தர்மராணி ஜெகநாதன்


**அட்டைப்படம்:** "கொரோனா வைரஸ்" பின்னணி

**பதிப்பு:** ஜுன் 2020

**பதிப்புரிமை:** ஆக்கியோனுக்கு

**பக்கங்கள்:** 04+56

கனிஷ்ட இடைநிலை வகுப்பு (தரம் 6–9)
மாணவர்களின் படைப்பாற்றலையும், எழுத்தாற்றலையும்
ஊக்கப்படுத்தும் வகையில் ஆக்கப்பெற்றது.



# என்னுரை

நாட்டில் கொவிட்-19 கொரோனா தாக்கத்தின் வீச்சும், அமுல்படுத்தப்பட்ட தொடர் ஊரடங்கின் வெறுமையுமே என்னை இந்தப் பணிக்கு தூண்டி யது. அன்றியும் இந்த வாய்ப்பையும் எனக்கு அளித்துள்ளது. இக் காலங்களில் “கொவிட்-19” மற்றும் “நீண்டகால ஊரடங்கு” மக்களின் நாளாந்த வாழ்க்கையை பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் முக்கிய பேசுபொருளாக இவை இருந்தது. பாடசாலை மட்டத்தில் பொதுத் தேர்வுகளுக்கு கட்டுரைத் தலைப்புக்களாகவும் எதிர்பார்க்கக் கூடியவை. எனவே இவற்றின் முக்கியத்துவம் கருதி வேறு சிறந்த கட்டுரைகளையும் இணைத்து பயனுள்ள நூலாக வெளியிட எண்ணினேன்.

ஒரே மாதிரியான, அதுவும் எல்லோரும் அறிந்த விடயங்களையே அதிக மாக மாணவர்களுக்குரிய கட்டுரைகளில் பார்க்கின்றோம். புதிய தகவல் களைத் தேடி, கண்டுபிடித்து படிப்பது மிகவும் அவசியம் என்ற நோக்கிலே, முடிந்தளவு அதிகம் வெளிவராத தகவல்களை புள்ளி விபரங்களுடன் இணைத்து தரப்பட்டுள்ளது. இதனால் கட்டுரையின் உள்ளே பயணிக்கும் போது கட்டுரையின் நடை சற்று கடுமையான தோற்றப்பாட்டைத் தரலாம்.

கட்டுரை எழுதுதல் மாணவர்களால் தன் சுயசிந்தனை சார்ந்து எழுதப் படுகிறதா வென்றால் அது கேள்விக்குறிதான். மாணவர்களின் திறன் இங்கு மையப்படுத்தப்படுவதில்லை. மனப்பாடம் செய்து எழுதுவது, மாணவர்களின் திறனில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவ தில்லை. மாறாக மனப்பாடம் செய்யுந்திறனே அதிகரிக்கும்.

எண்ணங்களையும், சிந்தனைகளையும் செம்மையான முறையில் வளர்த் தெடுப்பதில், எழுதுதல் முக்கிய பங்காற்றுகிறது. மாணவர்கள் வாசிப்பின் மூலம் கிரகித்த விடயங்களை உள்ளடக்கி சுயசிந்தனையில் எழுதப்பட வேண்டும். இது மாணவர்களை மனப்பாடம் செய்வதில் இருந்து மீட்கும். இதனால் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் விருத்தியடையும்.

பொரும்பாலும் கட்டுரையின் தலைப்பு மற்றும் அதற்கான முழு தகவல் களையும், ஆசிரியர்களே கொடுத்து விடுவார்கள். இதனால் மாணவர் களின் சிந்திக்கும், எழுதும் திறன் வளர்வதில்லை. மாறாக தலைப்பை மட்டுமே வழங்கி, அதற்கான மேலோட்டமான கருத்துக்களை கூறி எழுத வைக்கலாம்.

# உள்ளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை … … … … … | 01 |
| 2. | கொவிட்-19 (கொரோனா வைரஸ்) … | 03 |
| 3. | ஊரடங்கு … … … … … … | 08 |
| 4. | எமது நாடு … … … … … … | 11 |
| 5. | நான் பார்த்த கண்காட்சி … … … | 15 |
| 6. | இயற்கையைப் பாதுகாப்போம் … … | 19 |
| 7. | வாசிப்பின் பயன் … … … … … | 24 |
| 8. | மரம் வளர்ப்போம் … … … ... | 28 |
| 9. | தண்ணீர் … … … … … … | 31 |
| 10. | வனவிலங்குகள் … … … … … | 35 |
| 11. | ஒரு பேனையின் சுயசரிதை … … | 38 |
| 12. | வீதி விபத்து … … … … … | 42 |
| 13. | நான் பார்த்த திருவிழா … … … | 46 |
| 14. | முதலுதவி … … … … … … | 50 |
| 15. | கொழும்பு துறைமுக நகரம் … … … | 53 |
| 16. | பத்து அழகுகள் (தகவல் குறிப்பு) … … | 56 |

# முன்னுரை

கட்டுரை எழுதும் முறை பற்றிச் சிந்திப்பது முக்கியமான கற்றல் முறை யாகும். சிறுகதை, கவிதை, உரைவீச்சு, கட்டுரை ஆகிய நான்கு வெளிப் பாட்டு வடிவங்களே எழுத்துலகில் உண்டு. இவற்றுள் கட்டுரையே முதன்மையானது. இதனால் பொதுத் தேர்வுகளிலும் கட்டுரை எழுது தல் முதன்மையும், முக்கியமும் பெறுகிறது. ஆகவே கட்டுரையின் இயல் புகளை மாணவர்கள் அறிந்திருப்பது இன்றியமையாதது ஆகும்.

ஒரு பொருள்பற்றி சிந்தித்து சிந்தித்தவற்றை ஒழுங்குபடுத்தி எழுதுவதே கட்டுரை. பொருள் பற்றிய உள்ளக் கருத்துக்களை இணைத்து தனித்துவ மான மொழி நடையில் எழுதுவது அவரவர் தனித் திறமையாகும்.

கட்டுரை எழுதும்பொழுது பொருள் ஒழுங்கு, சொல்தெரிவு, சிறு வாக்கிய அமைப்பு, பத்தி அமைப்பு, குறியீடுகள் உபயோகம் என்பவற்றில் கவனம் தேவை. கட்டுரையின் நடை தனது இயல்பான நடையாக இருத்தல் வேண்டும். ஒரு கட்டுரையின் உள்ளே அக்கட்டுரையின் நடையையும் வடிவமைப்பையும் ஒரே சீராக வைத்திருப்பது படிப்ப வருக்கு தெளிவையும், நிறைவையும் உண்டாக்கும்.

கட்டுரையானது முன்னுரை, பொருளுரை, முடிவுரை கொண்டு அமை தல் வேண்டும். முன்னுரையும், முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமைய வேண்டும். முன்னுரை கட்டுரையின் பிரதான கருத்தை குறித்துக் காட்டுவதாக இருத்தல் வேண்டும். முடிவுரையானது சொல்லப் பட்ட கருத்துக்களை தொகுத்துக் கூறுவதாகவும், கட்டுரையின் கருப் பொருளை முடிவுக்குக் கொண்டுவருகிற தன்மையுள்ளதாகவும் அமைய வேண்டும். கட்டுரையின் முன்னுரையையும், முடிவுரையையும் பார்த்தாலே கட்டுரையின் சிறப்புத் தன்மை விளங்க வேண்டும்.

பொருளுரையானது, எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக் கிக் கூறும் பகுதி ஆகும். ஆதலின் அதைப் பல பத்திகளாகப் பிரித்துப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு ஏற்ப

உள்தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகப் பொருளுரை எழுதப் படலாம். கூற வந்த விடயத்தை நேர்த்தியாக தெளிவுபடுத்த வேண்டும்.

இந்நூலில் தரப்பட்ட கட்டுரைகள் மாணவர்களின் பயிற்சிக்கானது. ஒவ்வொரு கட்டுரையையும் 2-3 முறை கருத்தூன்றி வாசிக்கவும். இதன் மூலம் கட்டுரையின் கருப்பொருளையும், சாராம்சத்தையும் கிரகித்துக் கொள்ளமுடியும். கட்டுரை எழுத தொடங்குவதற்குமுன் கிரகிக்கப்பட்ட கருத்துக்கள் மனதில் தொடராக எழவேண்டும். எழுந்த இக் கருத்துக் களை தத்தமது மொழி நடையில் கட்டுரையாக எழுதலாம். இதற்காக மேலே தரப்பட்ட உதவிக் குறிப்புக்கள் பயனுடையதாக இருக்கும். கிரகித்துக் கொண்ட கருப்பொருளுடன், தரவுகள், புள்ளி விபரங்கள், சம்பவங்களைப் பயன்படுத்தி கட்டுரையை முடிவுக்கு கொண்டு வரலாம்.

தரப்பட்ட ஒரு கட்டுரையின் கருப்பொருள் அல்லது தரவுகள் வேறு தலைப் புக்களைக் கொண்ட கட்டுரைகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்படலாம். உதாரணமாக “நான் கண்ட வீதி விபத்து” என்னும் கட்டுரையை புதிதாக எழுதவேண்டுமானால், இங்கு தரப்பட்ட “வீதி விபத்து” கட்டுரையின் பகுதி கள் இதற்காக பயன்படும். இந்த உத்தி மாணவர்களின் தனித்திறமை யிலேயே தங்கியுள்ளது.

கட்டுரை எழுதுவதற்கான விதிகள், கட்டுரையின் அமைப்பு ஆகியவற்றைத் தெரிந்துகொண்ட நீங்கள், நல்ல கட்டுரையை எழுதிப் பழகுங்கள். இதன் மூலம் உங்கள் படைப்பாற்றலையும், எழுத்தாற்றலையும் வெளிப்படுத்து வதற்கான தருணம் இதுவே. முயற்சியுங்கள், வெற்றி பெறுங்கள்! இதன் மூலம் பரீட்சைப் பெறுபேறுகளை சாதகமாக்கிக் கொள்ளுங்கள்.

# கொவிட்-19 (COVID-19)
## (கொரோனா வைரஸ்)

Corono Viros Disease 2019 என்பதன் சுருக்கமே "Covid-19". இந்த நோய்க்கு காரணமான வைரசின் பெயர் SARS-soV-2 எனப்படுகிறது. கொரோனா என்பது வைரஸ் குடும்பத்தின் பெயர். கொவிட்-19 என்னும் நோயானது சாதாரண சளிக்குக் காரணமான ஒருவகை வைரஸ் ஆகும். இதன் மேற்பரப்பில் 'ஸ்பைக்' எனப்படும் பூஞ்சணம் போன்ற புரத வடிவம் உள்ளது. இவை கிரீடம் போன்ற தோற்றத்தை தருவதால் கொரோனா என்று அழைக்கப்படுகிறது. கொரோனா லத்தீன் மொழியில் மகுடம் (கிரீடம்) என்று பொருள். இந்த புரத வடிவம் மனிதர்களின் கலங் களுடன் இணைந்து மனித உடலுக்குள் நுழைய வாய்ப்பை உருவாக்கித் தருகிறது.

இவை கலத்திற்குள்ளே வாழும் கட்டாய ஒட்டுண்ணிகள். உணவும், வாழ்விடமும் அளிக்கும் உயிரினங்களான "ஓம்புயிர்" கலத்திற்குள் மட்டுமே பெருக்கமடைகின்றன. ஓம்புயிர் கலத்திற்கு வெளியே இவை முழுமையாக செயலற்றவை. எனவேதான் உயிருள்ளவற்றின் பண்பு களையும், உயிரற்றவைகளின் பண்புகளையும் கொரோனா வைரஸ் பெற்றுள்ளது என்கின்றனர் உயிரியல் வல்லுனர்கள்.

கொவிட்-19 முதன் முதலில் சீனாவின் ஹுபே மாகாணத்தில் உள்ள வூஹான் நகரத்தில் 2019 டிசம்பரில் அடையாளம் காணப்பட்டது. சீனாவில் ஆரம்பமான வைரசின் சீற்றம் முதலில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பரவியது. கொரோனா வைரஸ் தொற்றுநோய் சீனாவைத் தாக்கியதை விட இந்த நாடுகளையே அதிகமாக தாக்கியது. இதைத் தொடர்ந்து ஆசிய நாடுகள் உட்பட ஏனைய நாடுகளுக்கும் விரைவாக பரவத் தொடங்கியது.

உலக சுகாதார அமைப்பினால் உலகளாவிய ரீதியில் இது ஒரு தொற்று நோயாக 11.3.2020 அன்று அங்கீகரிக்கப்பட்டது. 28.5.2020 நில

வரப்படி ஐ.நா அங்கீகரித்துள்ள 247 நாடுகளில், 215 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 58 இலட்சத்திற்கு அதிகமான கொவிட்-19 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், 3½ இலட்சத்திற்கு அதிகமானோர் இறந்தும் உள்ளனர். கொவிட்-19 நோய்த் தொற்று, உலகம் முழுவதும் பரவி யுள்ளதால், அதை கையாள்வது மிகவும் கடினமாகிவிட்டது. அதைக் கட்டுப்படுத்த சாத்தியமான கடுமையான நடவடிக்கைகளை எடுக்க அதிகமான நாடுகள் நிர்பந்திக்கப்பட்டிருந்தன.

வைரஸ் முக்கியமாக மக்களிடையே நெருங்கிய தொடர்பின்போது பரவு கிறது, இருமல், தும்மல் அல்லது உரையாடுவதன் மூலம் வெளிப்படும் சிறிய நீர்த்துளிகள் வழியாக பரவுகிறது. இந்த நீர்த்துளிகள் சுமார் 1.8 மீற்றர் (6 அடி) வரம்பிற்குள் செல்லக்கூடியது. அதன்பின் தரையில் அல்லது மேற்பரப்பில் விழுந்து விடுகின்றன. இந்நிலையில் நீர்த்துளிகள் விழுந்த மேற்பரப்பை தொட்டு, பின்னர் கண்கள், மூக்கு, வாயைத்தொடு வதன் மூலம், இவற்றின் வழியாக சுவாசப்பாதையில் தொற்றுகிறது. நேரடியாக சுவாசத்தாலும் வைரஸ் உடலில் சென்று விடுகிறது.

சாதாரணமாக மூன்று மணிநேரம் வரை உயிர்ப்புடன் இருக்கும். சுற்றி யுள்ள காற்றின் ஈரப்பதம், வெப்பநிலை ஆகியவற்றால் இந்த நேர அளவு மாற்றமடையும். சில சந்தரப்பங்களில், 72 மணி நேரம் வரை மேல் பரப்பு களில் வாழக்கூடியது. அறிகுறிகள் தோன்றிய முதல் மூன்று நாட்களில் இது விரைவாக தொற்றக்கூடியது, இருப்பினும் நோயாளிக்கு அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பும், நோயின் பிற்கால கட்டங்களிலும் பரவக்கூடிய சாத்தியங்களும் உண்டு.

கொரோனா வைரசின் அறிகுறிகள் ஒப்பீட்டளவில் காய்ச்சல் மற்றும் உலர் இருமல் ஆகியவை பொதுவான இரண்டு அறிகுறிகளாகும். குறை வான அறிகுறிகளாக சோர்வு, சுவாசக் கோளாறு, வாசனை உணர்வு இழப்பு, நாவின் ருசி இழப்பு என அறியப்பட்டுள்ளது. தவிர, மூச்சுத் திணறல், தசை மற்றும் மூட்டு வலி, தொண்டைப் புண், தலைவலி, சளி, வாந்தி, மற்றும் வயிற்றுப்போக்கு. அறிகுறிகளின் வெளிப்பாடு முதல் ஐந்து நாட்கள் வரை இருக்கும். சில சந்தரப்பங்களில் இரண்டு முதல் பதினான்கு நாட்கள் வரையும் இருக்கலாம். இந்த அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது. இந்

நோய் மேலும் நிமோனியா மற்றும் சிறுநீரகம் செயலிழப்பு உள்ளிட்ட அபாயகரமான சிக்கல்களுக்கு வழிவகுக்கும். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த குழந்தைகள் அல்லது முதியவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் ஆபத்து அதிகம் உள்ளது. நீரிழிவு, ஆஸ்துமா மற்றும் இதய நோய்கள் உள்ளவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படலாம்.

பரிந்துரைக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளாக சவர்க்காரம் கொண்டு கையை நன்றாக கழுவுதல், இருமும்போதும், தும்மும்போதும் கைக் குட்டை பாவித்தல், மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் இடைவெளியை பேணல், பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் நபர் களை கண்காணித்தல் மற்றும் சுயதனிமைப்படுத்துதல் ஆகியவை அடங்கும். பயணத்தடை, தனிமைப்படுத்தல்கள், ஊரடங்கு உத்தரவு மற்றும் வீடுகளில் முடக்குவது, பணியிடத்து கட்டுப்பாடுகள் ஆகிய வற்றை செயல்படுத்துவதன் மூலம் நோய் பரவலை சீர்படுத்தலாம்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை அடிப்படையில் அமெரிக்கா ஆரம்பத்தில் இருந்து முதல் இடத்திலே இருந்து வருகிறது. 28.5.2020 நிலவரப்படி, சீனா 14 ஆவது, இந்தியா 10 ஆவது இடத்தி லும், இலங்கை 99 ஆவது இடத்திலும் உள்ளது.

கொரோனா வைரஸ் நோயால் கண்டறியப்பட்டவர்களுக்கும், அவர்க ளால் பாதிக்கப்பட்டவர்களென சந்தேகிப்பவர்களுக்கும் வீட்டில் சுய தனிமைப்படுத்தல் பரிந்துரைக்கப்படுகிறது. சில சமயங்களில் தேவை கருதி குடும்பம் அல்லது கிராமம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படு கிறது. இப்படி 14 நாட்கள் கண்காணிக்கப்படுகிறார்கள்.

இந்நோயைத் தடுக்கவும், நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற வும் மருத்துவர்கள் போராடி வருகின்றனர். அதே நேரத்தில் சமூக இடைவெளிதான் இந்த நோய்க்கெதிரான சிறந்த ஆயுதம் என்று உலக மருத்துவ விஞ்ஞானிகள் சிபார்சு செய்கின்றனர். அறியப்பட்ட தடுப்பூசி மருந்து அல்லது குறிப்பிட்ட வைரஸ் சிகிச்சை மருந்து எதுவும் தற்போது வரை இல்லை. முதலுதவி சிகிச்சை மற்றும் ஆதரவு சிகிச்சை முறையே உள்ளது. அதாவது நோய் என்ன அறிகுறிகளை காண்பிக்கிறதோ அதற் கான சிகிச்சை முறையாகும். நோயாளிடமிருந்து தும்மல் அறிகுறி காணப்பட்டால் அதற்கான சிகிச்சையும், சுவாசக் கோளாறு காணப்படின் அதற்கான சிகிச்சையும் அளித்தல்.

கொரோனோ வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய சிகிச்சை முறை குறித்து இதுவரை எந்த அதிகாரப்பூர்வ முறையும் கண்டறியப்படவில்லை. இந்நிலையில் கொரோனா வைரஸ் சிகிச்சைக்கான மருந்து மற்றும் தடுப்பூசி கண்டறிவதில் உலக அளவில் வெவ்வேறு நாடுகள் ஆர்வமாக இருக்கிறது. கண்டறியப்பட்ட மருந்தோ, தடுப்பூசியோ பல பரிசோதனைகளைக் கடந்து சிபார்சுபெற்று எமது கைக்கு கிட்டுவதற்கு நீண்ட கால அவகாசம் தேவைப்படும்.

## இலங்கையில் கொவிட்-19

இலங்கையில் முதலாவது கொவிட்-19 நோயாளியாக ஜனவரி 27ஆம் திகதி சீன நாட்டுப் பெண்மணி அடையாளம் காணப்பட்டிருந்தார். உலகளாவிய ரீதியில் கொரோனாவின் தாக்கம் அதிகமாக உள்ள நிலையில் இலங்கையில் கொரோனா தொற்று பரவுவதற்கான அபாய நிலைமையை அரசாங்கம் உணர்ந்தது. நோய் பரவலை கட்டுப்படுத்த பல வழிமுறைகளை உடனடியாகவே ஆரம்பித்தது.

2020 பெப்ரவரி 16 இல் இருந்து வெளிநாட்டில் இருந்து வருபவர்களை “நோய் தடுப்பு நிலையங்களுக்கு” அனுப்பி பராமரிக்கப்பட்டு, தொற்று உள்ளவர்களை வைத்தியசாலைகளில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

சமூக இடைவெளி அரசினால் பரிந்துரைக்கப்பட்டு, பெப்ரவரி 12 இல் நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகள், மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு நீண்ட விடுமுறை அளிக்கப்பட்டது. இதே வாரத்திலேயே அரச மற்றும், தனியார் ஊழியர்களை வீட்டில் இருந்தே அலுவலக வேலைகளைக் கவனிக்கும்படி பணிக்கப்பட்டது. தனிமைப்படுத்தலுக்காக, பெப்ரவரி 20 இல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நாடு தழுவிய ரீதியிலும், பகுதியாகவும் பல தருணங்களில் அமுல்படுத்தப்பட்டது.

அடுத்தபடியாக, மார்ச் 11 ஆம் திகதி வெளிநாட்டில் இருந்து வந்த இலங்கையர் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இந்த நோயாளியுடன் பழகிய ஏனைய குடும்ப உறப்பினர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டனர். தனிமைப்படுத்தல் செயல்முறைக்கு உட்படுத்தப்படாத மற்றும் வைரஸ் தொற்று ஏற்பட்டதனை மறைத்த நபர்களைத் தேடிக் கண்டறியும் நடவடிக்கை பொலீஸாரினால் மேற்கொள்ளப்பட்டது. தனிமைப்படுத்தலுக்காக, வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் சில இடங்

களில் புதிதாக தடுப்பு மையங்கள் உருவாக்கப்பட்டன.


28.5.2020 நிலவரப்படி, 1469 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக கண்டறியப்பட்டுள்ளதுடன், 10 பேர் இறந்தும் உள்ளனர். தொற்றாளர்களில் 635 பேர் முப்படைகளைச் சேர்ந்தவர்களாவர்.

கொரோனா தொற்று நாட்டில் கடும் சமூக பொருளாதார சீர் குலைவை ஏற்படுத்தியுள்ளது. அன்னிய செலவாணி, சுற்றுலாத்துறை, சுயதொழில்கள், ஆடைக்கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிகள் பாரிய பின்னடைவைக் கண்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோயாளிகளை கையாள்வது அமெரிக்கா, ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளுக்கு சிரமமாக உள்ள நிலையில் மருத்துவர்கள், மருத்துவ வளங்கள் குறைவாகப் பெற்ற இலங்கை போன்ற நாடுகள் பல சவால்களை எதிர்நோக்குகிறது.

**கவனத்திற்கு:**

இலங்கை உட்பட உலக நாடுகளில் கொவிட்-19 தொற்று தீவிரமாக பரவிக் கொண்டிருக்கும் சம காலத்திலேயே இக்கட்டுரையும் எழுதப்பட்டது. தொடர்ந்து வைரசின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இந்நிலையில் கட்டுரை எழுதும்போது அறியப்பட்ட வைரசின் தாக்கம் பற்றிய புள்ளி விபரங்கள் கண்டிப்பாக காலப்போக்கில் மாற்றம் கண்டிருக்கும். அதே போல சிகிச்சை முறையிலும் முன்னேற்றம் கண்டிருக்கும். எனவே மாணவர்கள் இவற்றை கவனத்தில் கொள்ளவேண்டும்.



கொரோனா வைரஸ்

# ஊரடங்கு

ஊரடங்கு (curfew) என்பது அசாதாரண பதட்டம் நிறைந்த சூழ்நிலை களில், நிலைமையினை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசு அல்லது பொலீஸ் துறையினரால் அமுல்படுத்தும் சட்ட வரையறைக்கு உட்பட்ட உத்தரவாகும். பொது இடங்களில் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வர்கள் கலகம், கிளர்ச்சி அல்லது கலவரம் செய்வதைத் தூண்டும் நோக்கில் கூடுவதை தடுக்க இந்த சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

பொது மக்களின் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் நோக்கில் நிகழும், அல்லது நிகழ்த்தப்படும் இன, சாதிக் கலவரங்கள், வன்முறை, சட்ட எதிர்ப்பு, கொடிய நோய் பரவல் போற்ற காரணிகளில் இருந்து முன்பாது காப்பு தேவைப்படும்போதும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

இலங்கையில், பொலீஸ்துறை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைதி, சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்கு எந்தவொரு குறிப்பிட்ட காலப்பகுதி யிலும், எந்தவொரு பொலீஸ் பிரிவிலும் ஊரடங்கு உத்தரவை அறிவிக்க வும், நடைமுறைப்படுத்தவும் பொலீஸாருக்கு அதிகாரமும் உண்டு.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் அவசர விதிமுறைகளின் கீழ், ஜனாதிபதி நாடு தழுவிய ரீதியில் அல்லது எந்தப் பகுதியிலும் ஊரடங்கு உத்தரவை அறிவிக்கலாம். ஊரடங்கு உத்தரவின்போது, பொலீஸார் மற்றும் ஆயுதப்படைகளுக்கு விசேட கூடுதல் அதிகாரங்கள் நடை முறை யில் இருக்கும்.

இன, சாதிக் கலவரங்கள், வன்முறைகள் போன்ற காரணிகளுக்கான ஊரடங்கு உத்தரவானது அதன் தாக்கத்திற்கு ஏற்ப முழு நாட்டையுமே முடக்கும் நிலை ஏற்படலாம் அல்லது மாகாணங்கள், மாவட்டங்கள், வட்டாரங்கள் என பகுதி ஊரடங்கு உத்தரவாகவும் அமையலாம். இக் காலப் பகுதியில் அரச அலுவலகங்கள், சகல வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற பொது அமைப்புக்கள், பொது போக்குவரத்து சாதனங்களும் செயல்படுவதில்லை. நாடே முழுமையாக முடக்கப்படும்.

ஊரடங்கு உத்தரவின்போது அத்தியாவசிய தேவைகளுக்காக பொது மக்கள் பயணிக்க, அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் அனுமதி யைப் பெறலாம்.

சில சந்தரப்பங்களில் பிறப்பிக்கப்படும் ஊரடங்கு உத்தரவு வேறுபட்ட தாக இருக்கும், அவை பொதுவாக அத்தியாவசிய வேலை, அத்தியா வசிய பொருள் கொள்வனவு, மருந்தகங்கள், மட்டுப்படுத்தப்பட்ட அலுவலக செயல்பாடு போன்ற அவசரநிலைகளுக்கான விதிவிலக்குகளை உள்ள டக்கியதாகவும் அமையும். சந்தர்ப்பத்தின் தாக்கத்திற்கு அமைவாக சில நிபந்தனைகள், தளர்வுகள், சலுகைகளுடனும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

ஊரடங்கு நீடிப்பை பொறுத்தளவில் பொதுமக்கள் தமது அன்றாட அத்தியா வசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய மிகவும் சிரமப்படுவார்கள். ஊரடங்கு பற்றிய அறிவிப்புக்குப் பின்னர் தமது தேவைகளை நிறைவேற்றக் கூடிய சந்தர்ப்பம் மிகக் குறைவே. குறிப்பாக கிராமப் புறங்களில் அவர் களது பொருளாதாரம் இதற்கு ஈடுகொடுப்பதில்லை.

ஊரடங்கு நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் குடும்ப வன்முறைகள், குடும்ப சச்சரவுகள் போன்ற விரும்பத்தகாத விடயங்களும் நடைபெறவாய்ப் புள்ளது. ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள காரணத்தினால் வன்முறை யைப் பிரயோகிக்கும் நபரும் பாதிக்கப்படும் நபரும் ஒரே வீட்டுக்குள் முடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதே இதற்கு காரணமாகும்.

1961 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற சட்ட மறுப்பு போராட்டத்தின் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இதன்போது "நெருக்கடி கால நிலையையும்" கூடவே நாற்பத்தெட்டு மணி நேர ஊரடங்கு சட்டத்தையும் அமுல்படுத்தினர். இவ் ஊரடங்கு நிலை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் பிறப்பிக்கப் பட்டதாகும்.

1971 ஜனதா விமுக்தி பெரமுனையின் கிளர்ச்சியின்போது ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இது நாடு முழுவதற்குமான ஊரடங்காக இருந்தது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி தோவாலயங்கள், ஹோட்டல்களில் நடந்த குண்டுவெடிப்பு காரணமாக அமைதியற்ற சூழ்நிலை உருவானது. இதற்காக அன்று இரவு 12 மணி நேர ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்

டது. பொலீஸ்துறையால் பிறப்பிக்கப்பட்ட இந்த ஊரடங்கு குறிப்பிட்ட கிராமங்கள் அல்லது பிரதேசங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டது. தகவல் பரிமாற்றத்தின் மூலம் கிளர்சியை தூண்டும் சந்தர்ப்பம் காணப்பட்ட தால், முதல் முறையாக நாடு தழுவிய ரீதியில் முகநூல், வாட்ஸ்அப் முடக்கப்பட்டதுடன், இணையதள சேவையும் துண்டிக்கப்பட்டது.

2020 மார்ச் நடுப்பகுதியில் கொரோனா தொற்று இலங்கையில் அதிகமாக பரவத் தொடங்கியது. இந்நோயை கட்டப்படுத்துவதற்கு மக்களை தனி மைப்படுத்த வேண்டிய நிலை காணப்பட்டது. இதற்காக நாடு தழுவி யும், மாவட்ட ரீதியாகயும். பொலீஸ் பிரிவு ரீதியிலும், அவ்வப்போது நிலை மைகளுக்கு ஏற்றவாறு மாறிமாறி நடைமுறைப் படுத்தப்பட்டது. சில மாவட்டங்களில் தொடர்ச்சியாக 67 நாட்கள் வரை நீடித்தது. வரலாற் றில் அதிக நாட்களுக்கு ஊரடங்கு அமுல்படுத்திய காலம் இதுவாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இவை போன்று பல்வேறு காலங் களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வராலாறுகள் பல உண்டு. மக்களின் நலனை கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு உத்தரவானது சில சமயங்களில் மக்களுக்கு அசௌகரியங் களையும் ஏற்படுத்துவனவாகவும் உள்ளது. இவற்றையும் மீறி பாதிப்பில் இருந்து மக்களை விலக்குவதற்கான சந்தர்ப்பமாகவே ஊரடங்கு நிலையை நாம் கொள்ளவேண்டும்.



# எமது நாடு

இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கீழ் கரைக்கு அப்பால் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு தீவு இலங்கை ஆகும். இந்தியாவுக்கு தென்கிழக்கே அமைந்திருப்பதோடு 32 கிலோ மீற்றர் நீளமான பாக்கு நீரிணை இவ்விரு நாடுகளையும் பிரிகின்றது. வடக்கே பருத்தித்துறை முனையில் இருந்து தெற்கே தெவிநுவர வரை 432 கிலோ மீற்றர் (268 மைல்) நீளத்தினையும், கிழக்கே சங்கமன்கந்தமுனை தொடக்கம் மேற்கே கொழும்பு வரை 224 கிலோ மீற்றர் (139 மைல்) அகலத்தினை யும் உள்ளடக்கி 65610 சதுர கிலோ மீற்றர் (25332 சதுர மைல்) பரப்பள வினை கொண்டு காணப்படுகின்றது.

முற்காலத்தில் இலங்கை, இலங்காபுரி, லங்கா, நாகதீபம், தர்மதீபம், லங்காதுவீபம் என பல பெயர்களால் அழைக்கப்பட்டது. இலங்கையின் இயற்கை அழகினால் "இந்து சமுத்திரத்தின் முத்து" என அழைக்கப் படுவதுண்டு.

இலங்கை ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்ட ஜனநாயகக் குடியரசு ஆகும். இது ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினாலும், பாராளுமன்ற முறைமையினாலும் ஆட்சி செய்யப்படுகிறது.

இலங்கை தேயிலை, கோப்பி, இரத்தினம், தெங்கு, இறப்பர், கறுவா, மீன் ஆகியவற்றை உற்பத்தி செய்வதுடன், இவை பிரதான ஏற்றுமதிப் பொருட்களாகவும் விளங்குகிறது.

இலங்கையின் முக்கிய நகரங்களாக கொழும்பு, யாழ்ப்பாணம், திரு கோணமலை, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, காலி, குருநாகல், அநுராதபுரம் என்பவை காணப்படுகின்றன.

## அரச தலைவர்கள்

கோட்டாபய ராஜபக்ச இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார். 18.11.2019 பதவி ஏற்றுக்கொண்ட இவர் தற்போதய பிரதமர் மகிந்த ராஜபக்சவின் சகோதரர் ஆவர்.

தற்போது 19 வது பிரதமராக மகிந்த ராஜபக்ச பதவி வகித்து வருகிறார். ஏற்கனவே இவர் 2005 முதல் 2015 வரை இலங்கையின் 6 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆவார்.

## மக்கள் சமூகம்

இங்கு சிங்களவர், இலங்கைத் தமிழர், இலங்கைச் சோனகர், இந்திய வம்சாவளித் தமிழர், பறங்கியர், இலங்கை மலாயர் மற்றும் இலங்கை ஆபிரிக்கர் என பல சமூகத்தினர் வாழ்கின்றனர். இவர்கள் பல சமயங் களைப் பின்பற்றுவதுடன், தனித்துவமான கலாச்சாரங்களையும் பேணி வருகின்றனர்.

## தலைநகர்

ஆரம்ப காலம் முதலே இலங்கையின் தலைநகராக கொழும்பு இருந்து வந்தது. 1977 ஆம் ஆண்டில், கொழும்பு நகரில் உள்ள “சிறீ ஜெயவர்த் தனபுர கோட்டை” இலங்கையின் புதிய தலைநகராக ஆக்கப்பட்டது. இந்த புதிய நகரத்தில் பாராளுமன்றம் மற்றும் பிற நிர்வாகத் துறைகள் உள்ளன.

## குடியேற்றக் காலம்

குடியேற்ற காலம் எனப்படும் 1505 ஆம் ஆண்டு போர்த்துகேயரின் ஆக்கிரமிப்புடன் ஆரம்பமான காலனித்துவ ஆட்சியில், 1656 இல் ஒல்லாந்தரும், 1803 இல் பிரித்தானியரும் இலங்கையின் கடலோரப் பகுதிகளை ஆட்சிப்படுத்தினர். இக்காலங்களில் உள் பகுதிகள் சிங்கள மன்னரின் ஆட்சியில் இருந்தன.

ஆங்கிலேயர் 14.2.1815 இல் முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். இதன் மூலம் முழு நாடும் அதிகாரபூர்வமாக பிரித்தானியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டது.

## சுதந்திர தினம்

பிரித்தானியாவின் ஆக்கிரமிப்பில் இருந்து 4.2.1948 அன்று இலங்கை சுதந்திரம் அடைந்தது. அன்று D.S.சேனநாயக்க இலங்கையின் முதலா வது பிரதமராகப் பொறுப்பேற்றார்.

1947 இல் உருவாக்கப்பட்ட இரு அங்க இலங்கை நாடாளுமன்றம் (பிரதிநிதிகள் சபை மற்றும் செனட்சபை) 22.5.1972 இல் இல்லா தொழிக்கப்பட்டு ஓரங்க முறைமையுடன் கூடிய தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது.

## நிறைவேற்றதிகாரம்

1977 இல் பதவிக்கு வந்த J.R.ஜெயவர்த்தன அரசு, புதிய அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தியதோடு, நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை யையும் உருவாக்கினார். ஏற்கனவே இலங்கையில் 1977 வரை பிரதமர் ஆட்சி முறைமையே இருந்து வந்துள்ளது.

நிர்வாகத் தேவைகளுக்காக இலங்கை ஒன்பது மாகாணங்களாகவும், இருபத்தைந்து மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

## மாகாணசபைகள்

29.07.1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி 3.2.1988 இல் ஒன்பது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாகாணசபையும் எந்த அமைச்சினாலும் கட்டுப்படுத்தப்படாத சுயாதீன அமைப்பாகும். மாகாணங்களுக்கு உரிய நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் மாகாண சபையினால் நிர்வகிக்கப்படுகிறது.

## மாவட்டச் செயலகம்

இலங்கை 25 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட மும் மாவட்டச் செயலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது, மாவட்டங்கள் 332 பிரதேச செயலகங்களாகவும், மேலும் 14,022 கிராம உத்தியோ கத்தர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

இவற்றை விட மூன்று வகையான உள்ளூர் அதிகார மன்றங்கள் காணப்படுகின்றன. அவை, மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்பனவாகும்.

## தேசிய மொழிகள்

இலங்கையின் தேசிய மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் அரசகரும மொழியாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் 1987ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## தேசிய இனங்கள்

2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் மொத்த சனத் தொகை 20,359,439 ஆகும். இத்தொகை நடப்பாண்டில் (2020) அண் ணளவாக இரண்டு கோடியே பதினைந்து (21,500,000) இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. பெரும்பான்மை இனத்தவர் சிங்களவர் ஆவார். இவர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 74.9% ஆக உள்ளனர். அடுத்த முக்கிய இனத்தவராக தமிழர் உள்ளார்கள். நாட்டின் மக்கள் தொகையில் 15.2% ஆன இவர்கள், இலங்கை தமிழர் (11.1%) மற்றும் இந்தியத் தமிழர் (4.1%) என இரு பெரும் பிரிவினராகவுள்ளனர். இலங்கைத் தமிழர் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், இந்திய தமிழர் மத்திய மாகாணம் மற்றும் பதுளை மாவட்டத்திலும், பெரும்பான்மை யாக வாழ்கின்றனர். மற்றும் சோனகர் 9.3%, ஏனையோர் 0.6% ஆகவும் உள்ளனர்.

## தேசிய சமயங்கள்

2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி, இலங்கையின் பிரதான மதங்கள் பௌத்தம் (70.19%), இந்து சமயம் (12.61%), இஸ்லாம் (9.71%), கிறிஸ்தவம் (7.45%) ஆகவும் உள்ளது. சிங்களவர் பெரும் பாலாக தேரவாத பௌத்தத்தை பின்பற்றுவதுடன், தமிழர் பெரும்பா லாக இந்து சமயிகளாக உள்ளனர்.

## இயற்கை எழில்

இலங்கையின் இயற்கை எழில் கொஞ்சும் 103 ஆறுகள் காணப்படுகின் றன. அதி நீளமான ஆறாக மகாவலிகங்கை (335 கிலோ மீற்றர்) காணப்படுகிறது. மத்திய மலைநாட்டில் இயற்கை அம்சங்களாக மலைத் தொடர்கள் காணப்படுகின்றன. இவற்றில் உயரமான மலையாக பீதுறுதாலகால மலை (2524 மீற்றர்) காணப்படுகிறது. தவிரவும் சுற்றுலா வுக்கு சிறந்த இடமாக அழகிய கடற்கரைகளும் காணப்படுகின்றது.

# நான் பார்த்த கண்காட்சி
## - புத்தக கண்காட்சி -

புத்தக பதிப்பாளர்கள் சேர்ந்து கூட்டாக நடத்தும் திருவிழாவே புத்தக கண்காட்சி. தாங்கள் வெளியிட்ட புத்தகங்கள் எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் வீட்டிலோ, புத்தகக் கடையிலோ இருந்தால், விற்பனை யாகாது. வெளியில் உள்ளவர்களுக்கு அது வெளிப்படுத்த வேண்டும். அதற்காக ஒரு இடம் தேர்ந்தெடுத்து சிறுசிறு கடைகளை அமைத்து அழகுபடுத்தி, விளம்பரப்படுத்தி பெருமளவில் பொருள் செலவுசெய்து, கண்காட்சியை நடாத்துகிறார்கள். இக்கண்காட்சி, பல விதமான புத்தகங் கள் ஒரே இடத்தில் கிடைக்க உதவுகின்றன. வேடிக்கை பார்க்க வருபவ ரையும் புத்தகத்தை வாங்க வைத்து விடுகிறது கண்காட்சி.

புத்தக விற்பனை மற்றும் கண்காட்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்ட பத்தில் 27.8.2019 தொடக்கம் செப்டம்பர் முதலாம் திகதி வரை நடை பெற்றது. யாழில் முதல் முறையாக நடைபெறும் புத்தகக் கண்காட்சி இதுவாகும். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து எனது கல்லூரி மாணவர்களும் கண்காட்சியைப் பார்ப்பதற்கான ஏற்பாட்டை வகுப்பா சிரியை செய்திருந்தார். கல்லூரியின் விடுமுறைக் காலத்தில் நடைபெறுவ தால் முன் ஏற்பாடாக எனது வகுப்பாசிரியை ஒருவாரத்திற்கு முன்னரே எமக்கு அறிவித்தல் தந்திருந்தார். கண்காட்சியின் முதல் நாள் நிகழ்வில் கலந்து கொள்வற்காக, காலை ஏழு மணிக்கு கல்லூரியில் ஒன்று கூடினோம். கல்லூரி பேரூந்தில் வகுப்பு ஆசிரியையுடன் மாணவர்க ளும், கூடவே இரண்டு ஆசிரியர்களும் புறப்பட்டோம். கண்காட்சியின் அவசியம் பற்றியும், அங்கு கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறை கள் பற்றியும் பேரூந்தில் வைத்து மாணவர்களுக்கு வகுப்பாசிரியை யினால் விளக்கம் தரப்பட்டது.

இலங்கை நூல் விற்பனையாளர்கள் ஏற்றுமதி இறக்குமதி சங்கத்தினரே கண்காட்சியின் ஏற்பாட்டாளர்களாவர். இந்த புத்தக திருவிழாவிற்கு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள இலக்கிய வாசகர்கள், படைப்பாளி

கள் எனப் பலரும் ஆதரவு அளித்தனர் எனவும் அறிய முடிந்தது. அன்றைய தினம் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவும் நடைபெற்றதால் அங்கிருந்து கண்காட்சி மண்டபத்திற்கு இலவச பேரூந்து சேவையையும் ஒழுங்கு செய்திருந்தனர்.

யாழ் மாநகரசபை பகுதிக்குள்ளேயே எனது கல்லூரியும், கண்காட்சி நடைபெறும் வீரசிங்கம் மண்டபமும் உள்ளது. எனவே உரிய நேரத்திற்கு கண்காட்சி நடக்கும் மண்டபத்தை வந்தடைந்தோம். கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்துடன் வரிசை ஒழுங்கில் உள்ளே சென்றோம்.

நிறுவனங்களின் விளம்பர பதாதைகள் மண்டபத்தின் வெளியே கவர்ச்சிகரமாக தொங்கவிடப்பட்டிருந்ததை துாரத்தில் இருந்து பார்க்கும் போதே தெரிந்தது. இதுவே விழா ஒன்று நடப்பதற்கான அடையாளமாகவும் கணிக்க முடிந்தது. மண்டப வாயிலில் “யாழ் புத்தகத் திருவிழா 2019” என தமிழில் எழுதப்பட்ட வளைவு கம்பீரமாக காட்சி அளித்தது.

காலையில் ஆரம்ப நிகழ்வாக யாழ் ஆயர் மற்றும் யாழ். மாநகர சபை முதல்வர் ஆகியோர் வாயிலில் வைத்து மாலை மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து கண்காட்சியை மாநகர மேயர் சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி திறந்துவைத்தார். அரச அதிகாரிகள், புத்தக நிறுவன உரிமையாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கண்காட்சி மண்டபம், முப்பதுக்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்களாக அமைக்கப்பட்டு பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், சிறுவர் கதைகள், வழிகாட்டி நூல்கள், ஈழத்துப் படைப்புக்கள் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் இந்திய எழுத்தாளர்களின் புத்தகங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கென இந்தியாவில் இருந்து 20,000 க்கு மேற்பட்ட புத்தகங்கள் வரவழைக்கப்பட்டதாகவும் அறிய முடிந்தது. முதலில் சுற்றிப்பார்ப்பதிலேயே அதிக நேரத்தைக் கழித்தேன். தனித்தனியாக பிரிந்து பார்ப்பதற்கான அனுமதியை வகுப்பாசிரியை ஏற்கனவே தந்திருந்தார். எனினும் வருகை தந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தேவைப்படும் விடயங்களில் விளக்கங்களை தரத் தவறவில்லை.

தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளிலான பல்லாயிரக் கணக்கான

நூல்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. இதனால் மொழி வேறுபாடின்றி பல தரப்பினரும் வந்திருந்தனர். பாடசாலைக்குரிய நூல்களும் பெருமள வில் இருந்தன. எனக்குத் தேவையான நூல்களை வாங்கிக் கொண் டேன். சிறுவர் கதைகள் மற்றும் பாடசாலைப் புத்தகங்களை மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு வைத்திருக்கலாமே என அங்க லாய்த்தேன். இப்புத்தகக் காட்சியைப் பார்ப்பதன் மூலம் பல புதிய தகவல் களை தெரிந்துகொள்ள முடிந்தது. முதல் முறையாக இப்படியொரு கண் காட்சியை பாரப்பது புதிய அனுபவாகவும் இருந்தது.

பல எழுத்தாளர்களின் நாவல்கள். சிறுகதைகள். கட்டுரைகள். கவிதை தொகுப்புக்கள் என்பனவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. பல புத்தகங்களையும் பார்த்து மகிழ்ந்த நான், சிறுவர் கதைகள், அறிவியல் நூல்கள் சிலவற்றை எடுத்து சிறுசிறு பகுதிகளை வாசித்துப் பார்த்தேன். சிறந்த அட்டைப்படங்களுடன் கூடிய புத்தக தொகுதிக்கு அருகே நின்று தனியாகவும், சக மாணவிகளுடனும் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டேன். இப்படியாக நேரில் பார்த்து அனுபவித்தது என்னை உற்சாகப்படுத்துவதாக அமைந்தது.

மாணவர்கள் பலர் தனியாவும். பாடசாலைகள் மூலமும் வந்திருந்தனர். எனக்கு தெரிந்த நண்பர்களும் வந்திருந்தனர். பல புதிய நண்பர்களை சந்தித்து அவர்களின் அறிமுகங்களை பெற்றிருக்கிறேன். தெரியாத பல புதிய நல்ல விஷயங்களை அறிந்து கொள்ள இந்த புத்தக கண்காட்சி யும், அதில் சந்தித்த புதிய நண்பர்களும் எனக்கு உதவின.

கண்காட்சியில் சில வெளிநாட்டவர்களையும் பார்த்தேன். ஆங்கில புத்தகங்களும் காட்சிப்படுத்தப் பட்டிருந்ததனால் அவர்கள் ஆங்கில புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆர்வமாக படித்துப் பார்த்தனர். இலங்கை பற்றிய அழகிய அட்டைப்படத்துடன் கூடிய புத்தகங்கள் சில வற்றையும் வாங்கிக் கொண்டதை என்னால் அவதானிக்க முடிந்தது.

மண்டபம் இத்தகைய கண்காட்சிக்கு போதுமானதாக இல்லை என்றும், இருப்பதற்கு இருக்கைகள் எதுவும் போடப்படவில்லை என்றும் சிலர் குறைப்பட்டுக் கொண்டதையும் அவதானிக்க முடிந்தது. சிலர் வெளியே தரையில் அமர்ந்திருந்ததையும் கண்டேன்.

இப்படியான புத்தக் கண்காட்சி மூலம் புத்தகங்கள் பரந்துபட்ட அளவில் விற்பனையாவதால் வாசகர்களும் அதிகமாகிறார்கள். இது ஒரு ஆரோக்

கியமான விடையமாகப் பார்க்கிறேன். என் போன்ற இளம் தலை முறையினருக்கு இப்புத்தக கண்காட்சி மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இளம் தலைமுறையினரிடையே வாசிப்பு குறைந்துள்ள இக்காலத்தில் இத்தகைய புத்தக கண்காட்சிகள் வாசிப்பினை ஊக்கப் படுத்தும் என நம்பலாம்.



# இயற்கையை பாதுகாப்போம்

இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் சேர்த்து இயற்கை என்கின்றோம். அதாவது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு எனலாம். உயிரினம், உயிரின அறிவு போன்றவையும் இயற்கையில் அடங்கும்.

புவியின் வெப்பநிலை மற்றும் நிலவியல் போன்றவற்றுக்கு ஏற்ப குறிப் பிட்ட வகை பொருட்கள் எவ்வாறு தம்மை மாற்றிக்கொள்கின்றன என்பது வும் இயற்கை என பொருள் கொள்ளலாம்.

உயிரற்ற கூறுகளுடன், உயிருள்ள தாவரங்கள், விலங்குகள், நுண்ணு யிர்கள் ஆகிய உயிரினங்களையும் இணைத்த ஒர் கட்டமைப்பை கொண்டுள்ளது இயற்கை. மண், வளிமண்டலம், சூரியக்கதிர்வீச்சு, நீர் போன்ற முக்கிய சில காரணிகளில் நிலவும் வேறுபாடுகள், மண்டலத் தில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

## பூமி

உயிரினங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் ஒரே கிரகம் பூமி மட்டுமேயாகும். 70.8 சதவீத பூமியின் மேற்பரப்பு உப்பு நீர் நிரம்பிய கடல்களாகவும், எஞ்சிய பகுதி வசிப்பதற்கு ஏற்ற நிலப்பகுதிகளான கண்டங்கள், தீவுகள் முதலிய தோற்றப்பாட்டைக் கொண்டுள்ளது.

### காலநிலை

பூமியின் வளிமண்டலம் சுற்றுச்சூழலை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. காற்று மற்றும் சூரியக் கதிர்வீச்சு என்பன வெப்பநிலை வேறுபாடுகளை சமநிலைப்படுத்தி பூமியில் உயிர் வாழ்வைக் காத்துவருகிறது. அதிகரித்து வரும் வெப்பநிலை, அதிகரித்த அல்லது குறைவான மழை வீழ்ச்சி, காற்றுக்கோலங்கள் மாறுபடுதல், அனர்த்தங்களின் நிகழ்வுகள் போன்றவை காலநிலை மாற்றத்தை உணர்த்தும் நிகழ்வுகளாகும்.

## பூமியில் தண்ணீர்

உயிரின வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் தண்ணீர் முக்கிய பங்கு வகிக்கிறது. பரவலாகப் பயன்படுத்தப்படும் தண்ணீர், திண்ம நிலையில் பனிக்கட்டியாகவும், வாயு நிலையில் நீராவியாகவும் பூமியின் மேற்பரப்பில் 71 % அளவுக்கு நீர் நிரம்பி உள்ளது. மொத்த நீரளவில் 97.5% கடல் நீராகும். எஞ்சியிருக்கும் 2.5 % நன்னீராகும்.

## காட்டுப் பகுதிகள்

மனித செயல்பாடுகளால் கணிசமாக மாற்றமடையாத பூமியின் இயற்கை சூழலில் காணப்படும் பகுதி காட்டுப்பகுதி எனப்படுகிறது. இவை மனிதர்களின் கட்டுப்பாட்டில் இல்லாத இயற்கைப் பகுதியாகும். பூமியின் மொத்த நிலப்பரப்பின் ஏறத்தாழ 30% காடுகளினால் மூடப்பட்டுள்ளது. காடுகள் பல உயிரினங்களுக்குப் புகலிடமாக விளங்குகின்றன. அத்துடன் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதுடன், மண் அரிப்பையும் தடுக்கின்றன.

## உயிர் வாழ்க்கை

அமைப்பு, வளர்ச்சி, அறிவு, தூண்டல்பேறு, இனப்பெருக்கம் போன்ற உயிரினச் செயற்பாடுகளை வெளிப்படுத்துவன எல்லாம் உயிரினங்கள். தாவரங்களைச் சார்ந்தே விலங்குகளின் வாழ்க்கையும் நீடிக்கிறது. உயிரோடுள்ள தனிப்பட்ட இனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பதும், அழிவதுமாக மாறிமாறி நடக்கிறது. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தங்களை தற்காத்துக் கொள்ளமுடியாத இனங்களும், பிற உயிரினங்களின் போட்டியை எதிர்கொள்ள இயலாத இனங்களும் நாளடைவில் அழிந்து போகின்றன.

## நுண்ணுயிர்கள்

பூமியில் பல கலங்களுடைய உயிரினங்கள் தோன்றுவதற்கு காரணமான முதல் வடிவம் நுண்ணுயிர்களே ஆகும். ஆரம்பத்தில் இலட்சம் ஆண்டுகளாக இவை மட்டுமே உயிரினங்களாக பூமியில் இருந்துள்ளன. பொதுவாக நுண்ணுயிரிகள் கண்ணுக்குப் புலப்படாதனவாகவும், நுண்ணோக்கியின் உதவியால் மட்டுமே பார்க்கக் கூடியதாகவும் உள்ள ஒரு கலம் உடைய உயிரினங்களாகும்.

## அழகும் அழகியலும்

கலை, புகைப்படம், ஓவியம், கவிதை, இலக்கியம் என இயற்கை அழகு மக்களால் கொண்டாடப்படுகிறது, இயற்கையும், காட்டுயிர்களும் உலக வரலாற்றின் பல்வேறு காலங்களிலும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன.

## இயற்கை வளங்களின் சீரழிவு

மழை இயற்கையாக உள்ள பல்வேறு உயிரின வகைகளுக்கு ஒரு மாற்று இல்லாத மூலதனம் ஆகும். சுரங்கங்கள், பெட்ரோல் எடுப்பு, மீன் பிடிப்பு, வேட்டை ஆடுதல் மற்றும் காடு வளம் ஆகியவை இயற்கை நமக்கு தந்த வளங்களாகும். இயற்கை வளங்களை முறையில்லா முறையில் எடுப்பதன் மூலம் சீரளிக்கப்பட்டு வருகிறது. இந்த முறை யில்லா நடவடிக்கைகளுக்கு பல மட்டங்களில் இருந்தும் எதிரப்பு காட்டி யும் வருகின்றனர். விவசாய நிலங்களை குடியிருப்புக்களாக மாற்றுகின் றனர். அதனால்தான் நாம் அழிவை நோக்கி சென்று கொண்டிருக் கின்றோம். இதனால் சுனாமி, நிலநடுக்கம், அதிக வெப்பம், புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் நாம்தான் பாதிக்கப் படுகின்றோம். "நாம் எந்தளவு இயற்கையை நேசிக்கிறோமோ, அதை விட பன்மடங்கு இயற்கை எம்மை நேசிக்கும். இயற்கையை நாம் அழிக்கும்போது அதன் சீற்றமும் பன்மடங்காக இருக்கும். இதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

## மனித இடையூறுகள்

மனிதர்களின் தொகை பிற உயிரினங்களுடன் ஒப்பிடுகையில் குறை வான விகிதத்தில் உள்ளது. எனினும் இவர்களால் இயற்கைக்கு ஏற் படும் பாதிப்புகள் ஏராளமாகும். மனிதனின் வேகமான தொழில் நுட்பத் தின் வளர்ச்சியால் இயற்கை வளங்கள் அதிகமாக சுரண்டப்பட்டன. அதே சமயம் இவ்வளர்ச்சி, இயற்கை இடையூறுகளினால் ஏற்படும் சில ஆபத்துகளை போக்கவும் உதவியது. இத்தகைய முன்னேற்றங்கள் இருந்தபோதும், சூழ்நிலை மாசு, காடுகள் அழிப்பு, புகை போன்ற கேடு கள் மனிதர்களால் இயற்கைக்கு எதிராக செய்யப்படும் சில அச்சுறுத் தல்களாகும். மேலும் மனிதகுலம் பல்வேறு தாவரங்களையும் விலங்கு களையும் அழித்து விட்டது.

மனிதர்கள் ஓய்வு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்காக இயற்கை யைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான மக்கள் வேட்டையாடவும், வாழ்வாதரத்திற்காகவும் உயிரினங்களை அழித்து வருகின்றனர்.

விவசாயத்திற்காக பரந்தளவிலான காடுகளை அழிப்பதன் மூலமாக பல தாவர மற்றும் விலங்கினங்களுக்கான வாழ்விடங்கள் இல்லாது போகிறது. இது மண் அரிப்புக்கும் கணிசமாக வழிவகுக்கிறது.

## விழிப்புணர்வு

மனிதர்களினால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு, பிற உயிரினங்கள் யாவும் பாதிப்படைந்து வருகின்றன. நீர், நிலம், ஆகாயம், வாயு என நான்கு பூதங்களும் மாசடைந்துவிட்டன. சீக்கிரமே வாழ முடியாத இடமாக பூமி ஆகிவிடுமோ என்ற நிலை உருவாகி வருகிறது. வனங் கள் அழிந்து, நதிகள் வறண்டு, மலைகள் மறைந்து, கடல் நீர் உயர்ந்து போன நிலைக்கு வருகிறது. உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் இயற்கை தருகிறது. இதில் ஒன்றை இழந்துகூட மனிதர்களால் வாழவே முடியாது.

இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து மக்களிடையே விழிப்பு உணர்வை உண்டாக்க, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28 ஆம் நாள் உலக இயற்கை வளப்பாதுகாப்பு நாளாக கடைபிடிக்கப்படுகிறது. இதை உணர்ந்து, இயற்கையைப் பாதுகாக்க எம்மால் ஆனதைச் செய்வோம்.

## இயற்கையின் பாதுகாப்பு

உயிரினங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும், சுற்றுப்புற சூழல் களையும் அழிவில் இருந்து தடுப்பதில் எமது ஆற்றலையும், அறிவிய லையும் பயன்படுத்த வேண்டும். முக்கியமாக அழிவடைந்து வரும் உயிரினங்களை அவற்றின் அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும். இதற்கான சட்டங்கள் பல இருந்தும் கைமீறிப் போகும் செயல்கள் பல நடக்கத்தான் செய்கிறது.

## பாதிப்பை உண்டாக்குபவை

தொழிற்சாலை கழிவுகளில் இருந்து வெளியேறும் நச்சு தன்மை மண் ணையும் நீரையும் ஒரு சேர மாசுபடுத்துகிறது. புகை மண்டலம் வழி மண்டலத்தை அசுத்தமாக்குகிறது. பிளாஸ்ரிக், பொலிதீன் பைகளை விவசாய நிலங்களில் கொட்டுவதாலும், காற்றின் மூலம் அவை அடித்து செல்லப்படுவதாலும், அது உக்க பல வருடம் ஆகின்றது. நிலத்தில் புதை

யுண்ட பிளாஸ்ரிக் மூலம் விவசாய நிலங்கள் மாசுபட்டு வீரியமிக்க செடி, கொடிகள் வளர்ச்சித் தன்மையை இழந்து விடுகின்றன. விவசாய நிலத்தில் இயற்கை உரங்களுக்கு பதிலாக செயற்கை உரங்களை பயன்படுத்துவதன் விளைவாக மனிதனின் நோயின் தன்மை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அன்றியும் இன்றைய பெரும்பிரச்னையாக இருப்பது குடிநீர் மாசடைவதாகும்.

## வீட்டில் தொடங்குவோம்

வீட்டையும் சுற்றுப்புறத்தையும் எந்நாளும் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும். வீட்டில் உள்ள கழிவு பொருட்களையும், கழிவு நீரையும் முறையாக அகற்றிவிட வேண்டும். கழிவுகளை மண்ணுக்கு அடியில் விடுவதுதான் சரியான மறுசுழற்சி முறையாகும். பிளாஸ்ரிக், பொலிதீன் பைகளை அறவே பயன்படுத்தக்கூடாது.

வாகனம், தொழிற்சாலை புகைகளை குறைக்கிற வழிகளை ஆராய வேண்டும். அரசாங்கத்தின் சட்டத்தின்படி மாசை கட்டுப்படுத்தும் வழிகளை தொழிற்சாலைகள் செய்யவேண்டும்.

சூற்றுச்சூழலை பாதுகாக்க, காற்றையும், மண்ணையும், நீரையும் நஞ்சு சேராமல்காக்க இயற்கையை முதலில் பாதுகாக்கவேண்டும். இயற்கையை இயற்கையாகவே வைத்திருக்க வேண்டும். ஒரு மனிதன் தன் வாழ்நாளில் ஒரு மரத்தையாவது நட்டு தன் சந்ததிக்கு விட்டுச்செல்ல வேண்டும். மரம் நடுவதையும் வளர்ப்பதையும் கடமை என கொள்ள வேண்டும்.

இயற்கையை நேசிப்பது மட்டுமல்ல, அதைப் பாதுகாப்பதும் அவசியம். இது கடமை மட்டுமல்ல, பொறுப்பும்கூட.

இதன் மூலம் நாடும், நாமும் நலம் பெறுவோம்!, வழம் பெறுவோம்!.

# வாசிப்பின் பயன்

வாசித்தல் அல்லது படித்தல் என்பது எழுதப்பட்ட உரையின் எழுத்துக் களைப் பார்த்து, சொற்களைப் புரிந்து, அதில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து கொள்வது எனலாம். வரிவடிவத்திலுள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி உச்சரித்தலாகும். உச்சரிக்கும் உறுப்புகளும், சொற் களை நோக்கும் கண்களும் ஒத்துழைத்தால்தான் வாசிப்பு சரிவர நடைபெறும். ஆகவே, வாசிப்பானது காணல், உச்சரித்தல், பொருளு ணர்தல் என்ற மூவகை கூறுகளை கொண்டுள்ளது.

மொழி உருவான அன்றே வாசிப்புப் பழக்கமும் மனிதர்களிடையே உருவானது. “சிறந்த புத்தகம் சிறந்த நண்பன்“ என்று கூறுவார்கள். எமது ஓய்வு நேரங்களில் நாம் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாமும் இவ்வுலகில் ஒரு மேதையாகலாம்.

வாசிப்பானது உரத்து வாசித்தல், மௌனமாக வாசித்தல் என இரு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கலாம். வாசிக்கும்போது வரிகளுக்கு நேரே யும் இடையேயும் பார்வையைக் கொண்டு போகும் வேகத்தை அதிக ரிக்கச் செய்தல் வேண்டும். இவற்றின்போது வாசிப்பு வேகம் அதிகரிப் பது முக்கிய அம்சமாகும்.

வாசிக்கும்போது என்ன வாசிக்கிறோம் என்பதில் கவனம் இருந்தால் தான் வாசிப்பதைக் கிரகித்துக் கொள்ளமுடியும். ஒரு கதையை வாசிக்கத் தொடங்கினால் அதனை முடிக்கும் வரை அதை கைகளில் இருந்து வைக்க மனம் வராது. இதனைச் செய்ய கவனம், ஒருமுகத்தன்மை தேவை. எனவே வாசிக்க வாசிக்க இவை இயல்பாகவே வந்துசேரும். இந்த இயல்புகள் பின்னர் வாழ்வின் பல இடங்களில் பயன்தரும்.

நாம் சிறுவயது முதலே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் சிறந்த புத்தகங்களை வாசிப்பதால் எமது அறிவு விருத்தியடைவது மாத்திரமல்லாது ஓய்வு நேரத்தையும் பயனுள்ள தாக்கிக் கொள்ளமுடியும். எச்சந்தர்ப்பத்திலும் எம்மை வீட்டுப்

பிரியாத நண்பர்கள் புத்தகங்களே" என்கிறார் ஒரு அறிஞர். மனிதர் களை நல்வழிப்படுத்த புத்தகம் சிறந்த நண்பனாகவும், வழிகாட்டியாக வும் திகழ்கிறது.

இன்று குறிப்பாக இளைய சமுதாயத்தினரது வாசிப்பின் அளவு மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இது நல்ல எதிர்கால சந்ததிக்கு உகந்ததல்ல. எனவே மாணவர்களுக்கு வாசிப்பின் அவசியத்தை உணர்த்தி அவர்களின் வாசிப்பை அதிகரிக்க முன்வரவேண்டும். வாசிப்பு என்பது நுட்பமான கலை. புத்தகத்தினை வாசித்தல் என்பதுவும், வாசிப்பிற்கு ஏற்ற புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் அவரவர் மனம் சார்ந்ததாகும். வாசிப்புத் திறனானது ஆளுக்குஆள் மாறுபடும். அன்றியும் புத்தக வாசிப்பிற்குத் தகுந்த சூழலையும், நேரத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்பதற்காக தேவையற்ற புத்தகங் களையெல்லாம் வாசித்தல் கூடாது. மாறாக, எமக்குத் தேவையான, தகுதியான புத்தகங்களைத் தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும். வாசிப் பதற்கான புத்தகத்தினைத் தேர்ந்தெடுக்கும்போது சில கவனிப்புகளை கொள்ளவேண்டும். மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய, துறை சார்ந்த அறிவினை விரிவுபடுத்தக்கூடிய, புதுமையான செய்திகளைத் தருபவை யாக, படைப்பாளுமை வளர்க்க உதவுபவையாக, திறனாய்வு அறிவினை மேம்படுத்தக்கூடிய, பிறதுறை சார்ந்த புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும்.

புத்தகவாசிப்பு என்பது நடுநிலைத் தன்மையுடையதாக இருத்தல் வேண் டும். ஒரு குறித்த புத்தகத்தினைப் பற்றிய முன்கூட்டிய எதிர்மறை கருத்துக்களை மனத்திலிருந்து நீக்கிவிட்டு புத்தகத்தை உணர்ந்து வாசிக்க வேண்டும். அப்போதுதான் புத்தகத்தின் உண்மைத்தன்மை எமக்கு புலப்படும். வாசிப்பு விரிவாக விரிவாக தன்னைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தையும், தன்னையும் வாசகன் புரிந்து கொள்கிறான். வாசிப்புப் பழக்கத்தால் எமது அறிவூற்று பெருக்கெடுக்கும். அறிவியல் நூல்கள், மாமேதைகளின் சரித்திர நூல்கள், சமய சம்பந்தப்பட்ட நூல்கள் என்பன எமது அறிவுப் பசிக்குத் தீனி போடுவதாய் அமையும்.

முன்னைய காலங்களில் வாசிப்பதற்குப் போதிய நூல்கள் காணப்பட வில்லை. ஆனால், இன்றோ வாசிப்பதற்கு இலட்சக்கணக்கான புத்தகங்

கள் குவிந்து கிடப்பினும் அனேகர் அவற்றை உதாசீனப்படுத்துகின்ற னர். அன்று புத்தகம் இல்லாமல் நாம் அழுதோம் இன்றோ “என்னை வாசிப்பதற்கு யாரும் இல்லையே“ என்று புத்தகங்கள் அழுகின்றன. அந்தளவுக்கு இன்று புத்தகங்கள் பெருகிவிட்டன. வாசிப்பின் பயனை இவ்வுலகிலுள்ள அனைவரும் உணர வேண்டும். நூல்கள், நூலகங் களில் தூசு படிந்து இருக்கக் கூடாது. வீடுகளில் புத்தகங்கள் அலங்காரப் பொருளாகவன்றி அறிவைப் பெறும் பொருளாக மாறவேண்டும். இவை அனைத்தும் நிகழ வேண்டுமாயின் மக்களின் உள்ளத்தில் அறிவுத் தாகம் உணரப்பட வேண்டும்.

வாசிப்பு அன்றாட நிகழ்வுகளையும் தகவல்களையும் அறிந்து, அறிவை மேம்படுத்திக்கொள்ள உதவும் சிறந்த சாதனம். சிந்திப்பின் ஆற்றலை யும், குறித்த விடையத்தையும் நினைவில் நீண்ட காலத்திற்கு சேமித்து வைக்கவும் உதவுகிறது. வாசிப்பு மூளைக்கு ஒரு நல்ல பயிற்சி. தொடர்ச்சி யாக வாசிப்பை ஒரு பழக்கமாக கொண்டிருப்பதன் மூலம் மூளையானது தொடர்ச்சியான செயற்பாட்டில் இருக்கும்.

வாசிக்கும்போது கிரகித்த சம்பவங்களை, வாழ்வில் பொருத்திப் பார்த்து முடிவெடுக்கும் திறனை அதிகரிக்கலாம். வாசிப்பதால் பலரின் அனுப வங்கள், பகுத்தறியும் திறனைக் கூட்டி எதிர்காலத்தில் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை வெற்றிகரமாக முகம்கொடுக்க இந்த அறிவு உதவும். வாசிப்பதனால் புதிய சொற்கள், புதிய சொற்தொடர்கள் என்பனவற்றை அறியக்கூடியதாக இருக்கும். புதிய உவமைகள், புதிய வழியில் கருத்தை எடுத்துரைக்கும்முறை என்பன தெரியவரும். வாசிக்கத் தொடங்கிய வுடனே இவையொல்லாம் நடந்துவிடாது. காலப்போக்கில் புதிய சொற்கள், சொற்தொடர்கள் என்று எமது மொழித்திறன் அதிகரிக்கும்.

எழுதிப் பழகுவதால் எழுதும் திறன் அதிகரிக்கும். ஆனால் வாசிப்பு அந்த எழுதும் திறனை அதிகரிக்கும் ஆற்றலை உருவாக்கும். பல புத்தகங் கள், கட்டுரைகள் என்று வாசிக்கும்போது மற்றவர்களின் எழுத்து நடை, அவர்கள் கையாளும் எழுத்துமுறை என்று பல விடையங்களை எம்மால் கிரகித்துக்கொள்ள முடியும். இதனை அடிப்படையாக வைத்து எமது எழுத்துத் திறனும் அதிகரிக்கும் அல்லது மேம்படும்.

வாசிப்பு மன அழுத்தத்தை குறைத்து நிம்மதியை அதிகரிக்கிறது. நாம் அன்றாட வாழ்வில் இருக்கும் தொல்லைகளை சற்று நேரத்திற்கு மறந்து விட்டு ஒரு நாவலிலோ, கதையிலோ மூழ்கி அந்த உலகிற்கு சென்று வரலாம். அதாவது கற்பனை உலகை வாசிப்பதன் மூலம்தான் அனுப விக்க முடியும்.

புத்தக வாசிப்புப் பழக்கத்தினை நாம் தினசரி வாழ்க்கையின் நிகழ்வு களில் ஒன்றாகக் கொள்ளுதல் வேண்டும். புத்தகங்களின் மீது அதீத ஆர்வத்தினை வளர்த்துக் கொள்வதால் நாம் புதிய சிந்தனைகளைப் பெறலாம். புத்தகங்களை நாம் கண்ணில்படும் இடங்களிலேயே வைத் திருத்தல் புத்தகங்களின்மீது எமக்கு ஈடுபாட்டை ஏற்படுத்த உதவும். “நல்ல புத்தகங்கள் நல்ல மனிதர்களை உருவாக்கும். நல்ல மனிதர்கள் நல்ல சமுதாயத்தை உருவாக்குவார்கள்” என்பது உண்மை.

“இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்“ என்ற கூற்றுக்கேற்ப மாணவர்கள் இந்த வாசிப்புப் பழக்கத்தைக் கூட்டிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எனவே, இவ்வுலகிலுள்ள அனைவரும் ஓய்வு நேரங்களில் வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதன் மூலம் நாமும் ஒரு பூரண மனிதராக வாழ முயற்சிப்போமாக!

“உன் அறிவை விரிவு செய். அதுவே உன்னை விரிவுபடுத்தும்”



# மரம் வளர்ப்போம்

“மரம் வளர்ப்போம்”, “இயற்கையைக் காப்போம்”, “இயற்கையை நேசி”, “இயற்கையோடு வாழ்வோம்” இது போன்ற கோசங்கள் சமீப காலமாக அதிகம் பேசப்பட்டு வருகின்றன. காரணம் புவி வெப்பம் அடைந்து மனிதன் அழிவை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயமாகிவிட்டது. எனவே புவி வெப்பமயமாவதைத் தடுக்கும் முக்கிய காரணியாக இருக்கும் மரங்களை வளர்க்க வேண்டும். இது இன்றியமையாதாக இருக்கின்றது.

“வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்” என்ற நிலை மாறி “ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்” என்றும், “ஆண்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்” என்றும் பேசும் நிலைக்கு வந்துள்ளோம். எனவே இன்று இயற்கை அழிவை காக்க, வெப்பம் தவிர்க்க முதற்காரணியாக மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்ற உணர்வைப் பெறுவோம். நாடு வளம்பெற மூன்றில் ஒரு பங்கு காடுகள் மிக அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

மரங்கள் இயற்கையின் கொடை, இவைகள் பூமித்தாயின் முதல் குழந் தைகள். மரங்களை நாம் அழிக்கக் கூடாது. மாறாக அதைக் காப்பாற்ற வேண்டிய கடமை எமக்கு இருக்கிறது. ஏனெனில் இயற்கை அன்னை அனைத்தையும் எமது நலனுக்குத்தானே தந்து கொண்டிருக்கிறாள். எனவேதான் அரசு, பல தொண்டு நிறுவனங்கள், ஆர்வலர்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் மரம் வளர்க்கும் பல ஏற்பாடுகளை செய்து வருகின்றன. அவ்வப்போது விழிப்புணர்வு பேரணிகளையும் நடத்தி வருகின்றன. அரசாங்கம் காடுகள், மரங்கள் வெட்டி கடத்துபவர் களை பிடித்து தண்டிக்கிறது. புதிய காடுகளை உருவாக்குகிறது; பராம ரிக்கின்றது.

நச்சு வாயுவை உட்கொள்வதும், பிராண வாயுவை வெளிவிடுவதும் மரங்கள் செய்யும் அற்புதங்களில் ஒன்று. நலம் தரக்கூடிய, எம்மை வாழ வைக்கக்கூடிய மரங்களை இயற்கை செல்வங்களை நாம் அழிக்கக்

கூடாது. இன்று இயற்கை அழிக்கப்படுகிறது, மரங்கள் கொலை செய்யப்படுகின்றன. படிப்பு, வேலை நேரம் தவிர நாம் பெரும்பாலான நேரங்களில் வீட்டில்தான் இருக்கிறோம். அந்த நேரத்தை பயனுள்ள தாக்க வீட்டிலும் வீட்டைச் சுற்றிலும் மரங்கள், செடிகொடிகளை வளர்த் தால் காற்று தூய்மையாகும். இளைப்பாற நிழல் தரும்.

**செடிகள் வளர்ப்போம்**

வீடுகளில் சிறு சிறு செடிகளை வளர்க்கலாம். இதற்கு பெரிய இடம் தேவை யில்லை. உபயோகமற்ற சின்னச்சின்ன பாத்திரங்களில் செடி வளர்க் கலாம். நம் மனது எப்போதும் ஈரமாக, கோபமற்று குளுமையாக இருக்கும். அத்தோடு நம்மால் ஒரு காட்டை உருவாக்க முடியாது. குறைந்தது ஒரு மரம் கண்டிப்பாக வளர்க்க முடியும். அப்படி வளர்ப்ப தால் நம் வீட்டிற்குத் தேவையான நிழல், குளுமை கிடைப்பதோடு, ஆரோக்கியத்திற்கும் நல்லது. இதற்காக சிறிது நேரம் ஒதுக்கினாலே போதுமானது. எல்லோரும் பசுமையைப் பயிரிடலாம். உடலுக்கும் பயிற்சியாகிறது. வீட்டிற்கும் அழகைக் கொடுக்கிறது.

**மரங்கள் எண்ணற்ற பயன்பாடுகளைக் கொண்டுள்ளது**

1. மாசு நிறைந்த சூழலை மரங்கள் தூய்மைப்படுத்தும்.
2. தூய்மையான காற்றை வழங்கும்.
3. நிழலைத் தருகின்றன
4. வெப்பம் தணிக்கும்.
5. பறவைகளின் சரணாலயம்.
6. மண் அரிப்பை தடுக்கும்.
7. நிலத்தடி நீரைக் காக்கும்.
8. முக்கியமாக மழை பெய்ய பெரிதும் உதவுகின்றன.
9. பூ, காய், கனி, கீரை போன்ற உணவு வகைகளை தருகின்றன.
10. மருந்தாக பயன்படுகின்றன.
11. அழகு தரும் மர வேலைபாடுகளுக்கு உதவுகின்றன.
12. இயற்கை உரம் தருகின்றன.
13. இயற்கை சீற்ற அழிவை தடுக்கின்றன.
14. வீடு, கட்டடங்கள் கட்ட பயன்படுகின்றன.
15. நோய் தடுப்புக்கு உதவுகின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க முயற்சிக்க வேண்டும். மைதானங்கள், குடியிருப்புக்கள், பாடசாலைகள், வீதி ஓரங் கள் என பல்வேறு இடங்களில் மரங்களை நாட்ட முயற்சிக்கலாம். மரம் வளர்க்கும் ஆவல் இருந்தாலும், சூழலுக்கு ஏற்ற மரங்களை தேர்வு செய்வது அவசியம்.

பாடசாலைகளிலும், அரச, தனியார் நிறுவனங்களிலும் முக்கிய நிகழ்வு களுக்கு ஞாபகார்த்தமாக மரம் நாட்டுகிறார்கள். வீடுகளிலும் திருமணம், பிறந்தநாள் போன்ற முக்கிய நிகழ்வுகளிலும் மரம் நாட்டப்படுகிறது. குழந்தைகளுக்கு மரங்களை நேசிக்க கற்றுக் கொடுத்தால், அவர்கள் மனிதர்களை நேசிக்கவும் எளிதில் கற்றுக் கொள்வார்கள். ”நிழல் தரும் மரம் நடுவது” மக்கள் பயனுறச் செய்யும் நிலையான தர்மம் ஆகும். நாம் மறைந்த பிறகும் எமக்கான நன்மைகளை தேடித் தரும்.

வீட்டிற்கு ஒருமரம் என்ற செயற்பாடு எனிவரும் காலங்களில் போதாது. வாழும் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ஒரு மரம் என்ற நியதியை ஏற்றுக்கொண்டு மரம் வளர்க்க முன்வரவேண்டும்.

எனவே மரங்களை வளர்ப்போம்! காடுகளை உருவாக்குவோம்! மழை பெறுவோம். “பசுமையான நாட்டை உருவாக்குவோம்.



# தண்ணீர்

புவிப்பரப்பின் 71 % பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. நீர் இயற்கையில் திண்ம, திரவ, வாயு ஆகிய மூன்று நிலைகளில் காணப்படுகிறது, விண்ணில் நீராவி, மேகங்களாகவும், சமுத்திரங்களில் கடல்நீர், பனிப்பாறைகளாக வும், மலைகளில் பனியாறுகள், நதிகளாகவும் காணப்படுகிறது. சமுத் திரங்கள், கடல்கள், ஏரிகள், நதிகள், நீரோட்டங்கள், கால்வாய்கள், குளங் கள், குட்டைகள் போன்ற நீர் நிலைகளிலும் தண்ணீர் காணப்படுகிறது. மொத்த நீரளவில் 97.5% கடல் நீராகும். எஞ்சியிருக்கும் 2.5% நன்னீ ராகும்.

## அனைத்திலும் தண்ணீர்

உலகின் அனைத்துப் பொருள்களிலும் நீர் கலந்திருக்கிறது. நீர் கலவாத, நீர் இல்லாத இடமில்லை. தண்ணீர் ஊடுருவி நிற்காத பொருளு மில்லை. எம்முடைய மனித உடம்பில் 70% தண்ணீர் இருக்கிறது. இந்த தண்ணீர் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது. அதுமட்டுமல்ல, பூமி யின் தட்பவெப்ப நிலைகளைப் பாதுகாக்கவும் தண்ணீர் பயன்படு கிறது. உணவாகவும், பிற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் சாதனமாகவும், மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் அழுக்குகளை நீக்கித் தூய்மை செய்வதற்குத் தண்ணீரே பயன்படுகிறது. இந்த உலகம் தண்ணீர் மயம். இந்நிலையில் மனிதனுக்கு மிகவும் அத்தியா வசியமான தண்ணீரை பாதுகாக்க உலக தண்ணீர் தினமானது ஒவ் வொரு ஆண்டும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி  கொண்டாடப்படுகிறது.

தண்ணீரின்றி உலக இயக்கமில்லை; உயிர் வாழ்வன இல்லை. அத னால், திருவள்ளுவர் “நீரின்றியமையாது உலகு” என்றார். நிலம் பசுமை போர்த்ததாக இருக்க வேண்டும். நிலம் பசுமை தாங்கி விளங்குவது நிலத்திற்கும் நல்லது,  உயிர்க் குலத்திற்கும் நல்லது.  நிலம் பசுமையாக இருக்க வானில் இருந்து மழை பொழிய வேண்டும். நீர் விவசாய நீர்ப்பாசனத்துக்கே முக்கியமாகப் பயன்படுகிறது. நீரானது மின்சாரம் தயாரிக்கவும் பயன்படுகிறது.

எமது நாட்டு வாழ்வியலில் தண்ணீரின் அருமை பலருக்குத் தெரிவ தில்லை. தேவைக்கு அதிகமாக செலவு செய்பவர்களை “தண்ணீர் மாதிரி செலவு செய்கிறார்கள்” என்று சொல்வதுண்டு. ஆனால் உலக வாழ்க்கையில் தண்ணீர் இன்னும் பற்றாக்குறை என்பதை நாம் உணரவேண்டும். நிலத்தடி நீரும், நன்னீரும், மனிதர்களுக்கு உபயோக முள்ள நீராதாரமாகும்.

## வாழ்வியலுடன் நீர்

மனிதர்கள் உட்கொள்ளத் தகுந்த நீர் குடிநீர் என்றழைக்கப்படுகிறது. நீர் வடிகட்டுதல் அல்லது காய்ச்சிவடித்தல் மூலமாகவும் குடிக்கத்தக்க நீராக மாற்றப்படுகிறது. உணவின்றி சில நாள்கள்கூட வாழ்ந்து விடலாம். ஆனால், நீரின்றி ஒரு நாள் தாக்குப்பிடிப்பதே சிரமம். இதில் இருந்தே நீரின் முக்கியத்துவத்தை அறியலாம். அனைவருமே சரியான நேரத்தில் தண்ணீர் குடிப்பதை வழக்கத்தில் கொள்ள வேண்டும். மனிதன் உட்பட பெரும் பாலான பாலூட்டிகளிலும் நீரின் அளவு 71-78% எனக் கணக் கிடப்பட்டுள்ளது. உடலில் நீரின் அளவு, வயது, பால், உடல் எடை போன்ற காரணிகளால் மாறுபடும்.

## நீர் வாழ் உயிர்கள்

பூமியின் தண்ணீர் உயிர்களால் நிறைந்துள்ளன. மீன்கள், திமிங்கலங் கள் ஆகியவைகளை உள்ளடக்கிய பல்வேறு வகையான கடல்வாழ் பாலூட்டிகளும் அனைத்தும் நீரில் மட்டுமே உயிர்வாழ்கின்றன. ஈரூட வாழிகள் நீரிலும், நிலத்திலும் வாழும் திறனைப் பெற்றுள்ளன. கடற்பாசி கள் போன்றவை நீரில் வளர்ந்து நீரடி ஆதாரமாக இருக்கின்றன.

## சுவையும் மணமும்

நீரானது நிறமற்ற, சுவையற்ற, மணமற்றதொரு திரவமாகும். நீராவி, வாயு வடிவத்தில் இருக்கும்போது கண்ணுக்குத் தெரியாததாக இருக்கிறது. பலவிதமான பொருட்களைக் கரைத்து அவற்றிற்கு வெவ்வேறு சுவை களையும், வாசனைகளையும் கொடுக்கிறது. மனிதர்களும், விலங்கு களும், தமது புல விருத்தியால் உப்பு நீரையோ, அசுத்த நீரையோ தவிர்த்து விடுகின்றனர்.

## நீரின் சுழற்சி

சமுத்திரங்கள் மற்றும் ஏனைய நீர்நிலைகளிருந்து, நீரானது ஆவியாகி வளிமண்டலத்தினுள் சேருகிறது. காற்றிலுள்ள நீராவி குளிர்விக்கப்பட்டு மீண்டும் பூமியிலோ அல்லது சமுத்திரங்களிலோ மழையாக பெய்கிறது. இப்படியே மீண்டு மீண்டும் சுழற்சி முறையில் நிகழ்வுகள் நடை பெறுகிறது.

இந்த பிரபஞ்சமானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களால் ஆனது. இந்த ஐம்பூதங்களும் இல்லை என்றால் இந்த உலகத்தில் எந்த உயிரனமும் வாழ முடியாது. பூமியானது மூன்று பங்கு நீரினாலும், ஒரு பங்கு நிலத்தினாலும் சூழப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த மூன்று பங்கு நீரும் மனித வாழ்க்கைக்கு உகந்ததா எனில் இல்லை என்பதே உண்மை.

## வெள்ளமும் வரட்சியும்

ஒரு நிலப்பரப்பு தாழ்வானதாக இருந்து தண்ணீரால் சூழப்படும் பொழுது வெள்ளம் ஏற்படுகிறது. நதி பெருக்கெடுத்து கரைகளைத் தாண்டி ஓடும் பொழுதோ அல்லது சமுத்திரங்களாலோ வெள்ளம் ஏற்படலாம். ஒரு பகுதியானது வழமையான, சராசரிக்குக் கீழேயான மழையளவைப் பெறும்பொழுது வறட்சி ஏற்படலாம். அதாவது பல மாதங்களாகவோ, வருடங்களாகவோ ஒரு பகுதி அனுபவிக்கும் நீண்ட கால தண்ணீர் தட்டுப்பாடு வறட்சி எனப்படுகிறது.

## நீர் பற்றாக்குறை

பொதுவாக தண்ணீர் பற்றாக்குறை இயற்கை மற்றும் மனிதனால் உண்டாக்கப்படுகிறது. அபிவிருத்தி என்ற போர்வையில் நீர் நிலைகள் உட்பட இயற்கை அழிக்கப்படுதலும் காரணமாக அமைகிறது. இதனால் தண்ணீர் சந்தைப்படுத்தலில் பிரதான பங்கை வகிக்கிறது எனலாம்.

## தண்ணீர் சேமிப்பு

மனிதர்களுக்கும், நிலத்தில் வாழும் ஏனைய உயிர்களுக்கும் நன்னீர் இன்றியமையாதது ஆதலால், நீர் சேமிப்பு மிக முக்கியமான ஒன்று. பெருகிவரும் மக்கள் தொகையால் நீரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இதனால் தண்ணீர் சேமிப்பு அல்லது பாதுகாப்பு என்பது அனைவருக்கும் பெரிய சவாலாக உள்ளது.

தண்ணீரை சேமிக்காததும். தேவைக்கு மட்டும் பயன்படுத்தாது வீண் விரயம் செய்வதுமே தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு காரணமாகும். சிக்கன மாக இருப்பதால் மட்டுமன்றி நீர் ஆதாரத்தைப் பெருக்குவதும் பிரதான மாகும். மழை நீரை சேமிக்க வேண்டும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். குளங்கள் பாதுகாக்கப்படுவதுடன், தூர்வாரப்பட்டு மழைநீர் சேமிக்க வேண்டும். புதிய நீர்நிலைகளை உருவாக்க வேண் டும். நீர்த்திவலைகள் நிறைந்த மேகத்தை மழையாக மாற்றித் தரும் ஈரப்பதக் காற்றைப் பராமரித்து வரவேண்டும். இதற்கு நிறைய மரங் களை வளர்க்க வேண்டும்.

**பாடசாலை கட்டமைப்பு**

தண்ணீர் சிக்கன வழிமுறைகள் பாடசாலை மட்டத்தில் இருந்து ஆரம்பிக் கப்படல் வேண்டும். இதற்காக அனைத்து பாடசாலைகளிலும் நீர்ச்சேமிப்பு கட்டமைப்புக்களை உருவாக்கி மழை நீரைச் சேமிக்க வேண்டும். அத்துடன் மாணவர்களின் சிக்கன நீர் பாவனையை கண்காணித்து வழிநடாத்த வேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனும் சொட்டுத் தண்ணீரை கூட வீணாக்காமல் வரும் தலைமுறைக்கு சேமித்து வைப்பதே நாம் அவர்களுக்கு சேர்த்து வைக்கும் பெரும் செல்வம்.

தண்ணீரை சிக்கனமாகப் பாவிப்போம். சேமிப்போம். நீர் நிலைகளை பாதுகாப்போம்,



# வனவிலங்குகள்

இலங்கையில் சுற்றுச்சூழலுக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படும் இந்தக் காலகட்டத்தில் தாவரங்களும், உயிரினங்களும் சுற்றுச் சூழல் பராமரிப்பில் மிகவும் முக்கியமானவை. இன்றைய மக்கள் பெருக்கத்தின் விளைவால் இயற்கை வளங்கள் மிக வேகமாக அழிக்கப் பட்டு வருகின்றன. குறிப்பாக காடுகளை அழிப்பதால் விலங்கினங்கள் வெகுவாக அழிந்துவிட்டன.

## வனவிலங்கின் முக்கியத்துவம்

இயற்கை வளங்கள் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருபவை விலங்குகளும், மரங்களும், தாவரங்களுமே. இவ்வாறான இடங்கள் சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. இலங்கையில் அமைந் துள்ள வனவிலங்குகள் காப்பகங்கள் பல புகழ் பெற்ற சுற்றுலாத் தலங் களாக உள்ளன. விலங்கினம் பற்றிய கல்வியறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் வனவிலங்குப் பாதுகாப்பிடங்கள் உதவி புரிகின்றன.

## அழிவை நோக்கி

விவசாயத்திற்காக காடுகளை அழித்தல் மற்றும் மக்கள் தொகை பெருக் கம் ஆகியவற்றால் ஏற்படும் அழுத்தம் வனவிலங்குகளின் இழப்பிற் கான காரணங்களில் முக்கியமானவை. இயற்கையான வாழ்விடங் களையும் சூழல் அமைப்புகளையும் அழிப்பதால், ஆங்காங்கே வாழும் உயிரினங்களைத் தத்தளிக்க விடுகிறோம். கடும் சூழல் மாற்றங்களான உலகம் வெப்பமயமாதல் மற்றும் பருவகால மாற்றங்கள் போன்ற வற்றை எதிர் கொள்ளமுடியாத உயிரினங்கள் மெல்ல அழியத் தொடங்கு கின்றன. இதனால் சில குறிப்பிட்ட மிருகங்கள் அருகிவரும் இனமாக கருதப்படுகிறது.

வனப்பகுதி மற்றும் சரணாலயங்கள் அமைந்துள்ள இடங்களில் வீதி விபத்துகளில் சிக்கி வனவிலங்குகள் பரிதாபமாக உயிரிழக்கின்றன. விலங்குகளின் வாழ்வாதார சூழலில் மனிதர்களின் குறுக்கீடு மற்றும் ஊடுருவல்களால்தான் இத்தகைய விபத்துகள் நிகழ்கின்றன. வன விலங்கு வளத்தின் மதிப்பையும், பாதுகாப்பிற்குமான அவசியத்தையும்

உணர்ந்த அரசு, வனவிலங்குகளை பாதுகாப்பதற்கு விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்தி வருகிறது.

## பாதுகாப்பான திட்டங்கள்

விலங்குகளை வேட்டையாடல் போன்ற மனித நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பதற்காகவும், அழிந்துவரும் விலங்குகளைக் காப்பதற்காகவும் விலங்குகள் சரணாலயம். அரசு விலங்குகள் காப்பகம் என பல திட்டங் களை நடைமுறைப்படுத்தி வருகிறது. வனவிலங்குகளை மேம்படுத்தும் முயற்சியாகவும் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரு கிறது. காடுகளை பராமரித்தல், புதிய காடுகளை உருவாக்குதல், விலங்கு களின் வாழ்விடங்களை பாதுகாத்தல், சதுப்பு நிலங்களை, நீர்நிலை களை உருவாக்குதல் என்பன சிலவாகும்.

## மனிதனின் சொந்த தேவைகள்

மனிதன் தனது சொந்த தேவைகளுக்காக விலங்குகளை அழிப்பதில் முனைந்து அபூர்வ விலங்குகளையும், உயிரினங்களையும் அவற்றின் சுவடுகள் தெரியாதபடி அழித்து விடுகிறான். பெருமைக்காகவும் விலங்குப் பொருள்களான தந்தம், தோல், இறைச்சி, பற்கள், தேன், அரக்கு, பட்டு போன்றவற்றை விற்பனை செய்யவும் வேட்டையாடுகிறார்கள்.

## பாதுகாக்கப்படும் பிரதேசங்கள்

இலங்கையின் பாதுகாக்கப்படும் பிரதேசங்கள், இலங்கையின் வனவள பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் 501 பாதுகாக்கப்படும் பிரதே சங்கள் உள்ளன. வனவள பாதுகாப்புதுறையின் கண்காணிப்பில் உள்ள பாதுகாக்கப்படும் பிரதேசங்கள் 1988 ஆம் ஆண்டின் தேசிய மரபுரிமை கள் வனாந்தர பிரதேச சட்டத்தில் வரையறுக்கப் பட்டவையாகும். பாதுகாக் கப்படும் பிரதேசங்கள் இலங்கையின் மொத்தப் பரப்பில் 26.5%. இது ஏனைய ஆசிய நாடுகள் மற்றும் அநேக உலக நாடுகளைக் காட்டிலும் அதிக சதவீதமுடைய பாதுகாக்கப்படும் பிரதேசங்களாகும். ஆண்டு தோறும் அக்டோபர் முதல் வாரம் உலக வன உயிரினப் பாதுகாப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

## சரணாலயங்களில் தடைசெய்யப்பட்டவை

விலங்குகளை கொலை செய்தல் அல்லது வேட்டையாடுவது, பறவைகள் மற்றும் ஊர்வன முட்டைகள், கூடுகளை அழித்தல், காட்டு விலங்குகளை தொந்தரவு செய்தல், விலங்குகளின் இனப்பெருக்கத்தில் குறுக்கிடுவது, தாவரங்கள் மற்றும் விலங்குகளை சேதப்படுத்தக் கூடிய பொறி, வெடிகள், நச்சுப் பதார்த்தங்கள், தீ பற்றக் கூடிய பொருட்களை வைத்திருத்தல் அல்லது பயன்படுத்தல் என்பன சரணாலயங்களிலும், வனப் பகுதிகளிலும் தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

## விசேட ஜீவிகள்

நாட்டில் வசிக்கும் ஆசிய யானை, சோம்பல் கரடி, சிறுத்தை, கறுப்பு கழுத்துள்ள கொக்கு, உவர் நீர் முதலை, ஏழுவரி ஆமை மற்றும் நீலத் திமிங்கிலம் ஆகிய ஏழு விசேட ஜீவிகளின் தனித்தன்மைகளை விசேடமாக அறிந்து கொண்டதன் மூலம் இவை இலங்கையின் விசேடமான ஜீவிகளாகப் பெயரிடப்பட்டுள்ளன.

இலங்கையில் விலங்கு மற்றும் தாவரப் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஏற்ப ஆசிய யானைகள், சிறுத்தைகள், சோம்பல் கரடி, கொக்குகள், உவர்நீர் முதலைகள், ஆமைகள், நீலத் திமிங்கிலம் அதிகளவில் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினமாக பெயரிடப்பட்டுள்ளது.

வளமான புவியை இயற்கையோடு இணைந்து வாழ்ந்து, வனவிலங்குகளை பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.



# ஒரு பேனையின் சுயசரிதை

நான் இப்பொழுது தெருவோரம் கிடக்கிறேன். எனது நிறம் மங்கிவிட்டது. அங்கங்கள் சில சிதைந்துவிட்டது. இன்றைய எனது நிலை மிகவும் வேதனை தருகிறது. மழை, வெயிலை தாங்கினாலும், இந்த மனிதர் களின் கையில் அகப்பட்டு விடக்கூடாது என்ற பரிதவிப்போடு இருக்கிறேன்.

பாடசாலை குப்பைத்தொட்டிக்குள் இருந்த நான் தெருவுக்கு வந்தது எப்படி. எனக்கே ஞாபகமில்லை. சற்று குழப்பமடைந்துதான் போய் விட்டேன். இந்த இடம் சற்று பாதுகாப்பானது போலும். நாட்டில் தொற்றிக் கொண்ட கொரோனா வைரஸ் காரணமாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் எனக்கு பாதுகாப்பைத் தந்திருக்கிறது. சன நடமாட்டமே இல்லை. அதனால் யாரும் இதுவரை என்னை சீண்டவில்லை.

எனது கடந்தகால வாழ்க்கை மிகவும் சுவையானது. இப்போது அதையே நினைத்துப் பார்த்து ஆறுதலடைகிறேன். நான் யார் என்று யோசிக்கிறீர் களா? நான் வேறு யாருமல்ல இப்பொழுது உங்கள் கையில் இருப்பது எனது நண்பன்தான். புரிந்துவிட்டதா? நான்தான் பேனை.

நான் ஜப்பான் நாட்டில் பிறந்தேன். நான் பிறந்த நாடு தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்த நாடு. என்னை உருவாக்க மூலப் பொருட்கள் பல தேவைப்பட்டன. அவை பல்வேறு இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டன. எனது அங்கங்கள் ஒவ்வொன்றையும் உருவாக்க தனித்தனி இயந்திரங்கள் தேவைப்பட்டன. இவ் இயந்திரங்கள் செயற்பட மனிதர் களது பங்களிப்பும் இருந்தது.

எனக்கான இறுதி வடிவம் எடுத்த என்னை ஒரு தொழிலாளி எடுத்து சுற்றுமுற்றும் ஆராய்ந்தான். பின்னர் அவன் என்னை பக்குவமாகத் தூக்கி அழகுபார்த்து உறையென்னும் பெயரில் ஆடை அணிவித்தான். எனக்கான பெறுமதி அட்டை ஒன்றையும் என்மீது ஒட்டி ஒரு பெட்டியில் இருந்த சக நண்பர்களுடன் வைத்தான்.

ஒரு நாள் மாலைப்பொழுது ஒரு குழுவினர் வந்தனர். என் முதலாளி யுடன் ஏதேதோ பேசினர். முதலாளியும் “ஜப்பானியப் பேனா என்றால் உலகப்பிரசித்தி பெற்றது அல்லவா?” என கூறி பல உத்தரவாதங்களை யும் கொடுத்தார். உண்மைதான் அந்த உத்தரவாதங்களுக்கு தகுதி யுடையவன்தான். இதனால் எனக்கும் நண்பர்களுக்கும் அதிக வரவேற்பு இருந்தது. இரு பகுதியினரும் சமசரத்துக்கு வந்தனர். எம்மை ஒரு வண்டியில் ஏற்றினர். சகோதரர்கள் சிலரைத் துன்பத்துடன் பிரிந்தோம். பின்னர் வண்டியில் இருந்து கப்பலுக்குள் ஏற்றினர். கடல் கடந்து வந்தோம். இலங்கை மண்ணில் கால்பதித்தோம்.

பல கடை முதலாளிகள் பங்கு போட்டு என்னுடன் இருந்த அனைத்து உறவுகளையும் எடுத்துச் சென்றனர். நான் வந்து இறங்கிய இடமோ கொழும்பு. ஆனால் வாங்க வந்த முதலாளிகள் இலங்கையின் நாலா பக்கமும் உள்ளவர்கள். எனக்கோ இருப்புக் கொள்வில்லை. யார் என்னை வாங்கிச் செல்லப்போகிறார்கள். அங்கு எப்படி என்னைப் பேணுவார்கள் என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கிவிட்டேன். ”நீ என்ன தனியாகவா போகப் போகிறாய் கூடவே நாங்களும் இருக்கிறோம் யோசிக்காதே” என ஆறுதல் கூறினர் நண்பர்கள்.

இருந்தும் உறவுகளையும், என்னை உருவாக்கிய தொழிலாளிகளை யும் நினைத்து வருந்தினேன். என்ன செய்வது எனக்கும் மாற்றம் ஒன்று தேவைப்பட்டது. என்னை வாங்கிய முதலாளி யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்றும், மிகவும் நல்லவர் என்றும் அறிந்து கொண்டேன். இது ஒரு விதத்தில் எனக்கு ஆறுதலாக இருந்தது. வாங்கிய அன்றே யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்டுவிட்டதனால் அடுத்த நாளே கடைக்கு வரமுடிந்தது.

வந்ததும் வராததுமாக நண்பர்களுடன் சேர்ந்து இருந்த பெட்டியை திறந்து என்னை மட்டும் எடுத்து அழகு பார்த்தார். பின் காட்சிப்படுத்தும் அலுமாரியில் என்னை அழகாக அடுக்கி வைத்தார். ஏனைய நண்பர் களை உள்ளே அலுமாரியில் வைத்தார். என்னை மட்டும் சிறப்பு இடத்தில் அமர்த்தியிருந்தது எனக்கு பெருமையாக இருந்தது.

ஒரு நாள் அந்தக் கடைக்கு ஒருவர் வந்திருந்தார். வந்தவர் “ஜப்பான் பேனை இருக்கிறதா” என வினாவியது கண்ணாடி அலுமாரிக்குள் இருந்த எனக்கு நன்றாக கேட்டது. தான் ஒரு பாடசாலை அதிபர் என்

றும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். கடை முதலாளியும் மகிழ்ச்சி யடைந்து என்னை எடுத்து காண்பித்தார். எனது விலையைக் கூறி, தாய்நாட்டில் என் முதலாளியிடம் பெற்ற உத்தரவாதங்களை பாடசாலை அதிபருக்கு ஒப்புவித்தார்.


பாடசாலை அதிபர் வெள்ளைத் தாளில் எழுதிப் பார்த்தார். "நன்றாக இருக்கிறது" என்று வியந்து என்னை விலைக்கு வாங்கினார். பாடசாலை அதிபரின் கரங்களில் நடமாடப் போகிறேன் என்றதும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

எனது புதிய எஜமான் தினமும் பாடசாலைக்கு செல்வதற்கு முதல்நாள் இரவே மறக்காமல் என்னை தனது சேட் பையில் வைத்துவிடுவார். மிகவும் கவனமாக என்னை பேணிவந்தார். மந்திரியில் இருந்து மாணவர்களின் பெற்றோர் வரை எத்தனை கடிதங்கள் எழுதியி ருப்பார். முறையீட்டுக் கடிதங்கள், வாழ்த்துக் கடிதங்கள், சிபார்சுக் கடிதங் கள், தண்டனைக் கடிதங்கள் என எண்ணில் அடங்காது. நான் எப்போதும் பெருமையாக நினைப்பது அவரது பதவி உயர்வைப் பற்றித்தான். இதற் காக நடந்த பரீட்சையில் நான் துணையாக இருந்து சித்தியடைய வைத்திருந்தேன் என்பதுதான். வேறுபாடின்றி சகலரிடமும் என்னைக் காட்டி பெருமைப்படுவார். அந்நேரங்களில் நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

ஒரு நாள் எஜமான் அவசரமாக என்னை சட்டைப் பையில் இருந்து எடுத்தார். கணப்பொழுதில் அவரது கையிலிருந்து தவறி நிலத்தில் விழுந்து விட்டேன். எஜமான் உடனே என்னை தூக்குவதற்கு நாற்காலி யுடன் திரும்பிய பொழுது நாற்காலியின் காலில் அகப்பட்டு உடைந்து விட்டேன். என் உறுப்புக்கள் உடைந்து உருக்குலைந்து விட்டேன். வேதனை ஒருபுறம், அழுகை மறுபுறம். யார் அறிவார் எனது வேத னையை. எனது நிலையைக் கண்ட எஜமான் அதிர்ச்சியடைந்தார். தொடர்ந்து பாவிக்க முடியாது என்று என்னை அலுவலக குப்பைத் தொட்டியில் எறிந்து விட்டார். இந்த மனிதர்களே இப்படித்தான் போலும்.

அப்போதுதான் ஒரு உண்மையை உணர்ந்தேன். ஏழைதான் எனது உடல் காயங்களை சரி செய்து மீண்டும் என்னை சேர்த்துக் கொள்வான். பணக்காரன் புதிது வரும் வரை தான் என்னை வைத்துக் கொள்வான் என்று புரிந்தது.

எனி.... எனது எதிர்காலம் எப்படி இருக்குமோ? என்று ஏங்குகிறேன். என்றாலும் நான் வாழ்ந்த காலத்தில் நல்லதையே செய்துள்ளேன். இதுவே எனக்கு என்றும் மகிழ்ச்சியைத் தரும்.



# வீதி விபத்து

தரைவழிப் போக்குவரத்தில் வீதிகளில் நடக்கக் கூடிய விபத்து வீதி விபத்து எனப்படுகிறது. வீதியில் செல்லும் வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதியோ அல்லது வீதியின் ஓரங்களிலுள்ள மரம் அல்லது கட்டிடங் களில் மோதியோ பெரும்பான்மையான வீதி விபத்துக்கள் நடக்கின்றன. வாகனம் செலுத்தப்பட்ட வேகம், வீதியின் தரம், வீதியின் வடிவமைப்பு, சுற்றுப்புறச் சூழ்நிலை, வாகன சாரதியின் ஓட்டுதல் திறன் மற்றும் வாகன சாரதியின் நடவடிக்கை ஆகியவையே விபத்திற்கு காரணங்களாக அமைகிறது. விபத்தைத் தடுக்கும் முகமாக வீதி ஒழுங்கு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாக வும் கருதப்படுகிறது. இலங்கை பொலீஸ்துறை நாடளாவிய ரீதியில் வீதி போக்குவரத்தை கண்காணித்து, ஒழுங்குகளை செய்து வருகின்றது.

நாம் வீதியில் இறங்கி வீடு திரும்பும் வரையில் உயிருக்கு உத்தரவாத மில்லாத அளவுக்கு வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. வாகனங் களின் அதிகரிப்பு, நெரிசலான போக்குவரத்து மற்றும் சாரதிகளினதும், பாதசாரிகளினதும் கவனயீனம் என்பனவும் வீதி விபத்துக்கள் இடம்பெறு வதற்குரிய அடிப்படைக் காரணிகளாக உள்ளன. வீதி விபத்துக்களை குறைப்பதற்காக அரசாங்கம் குறிப்பாக பொலீஸ்துறை பல்வேறு சட்டங் களை, விதிமுறைகளை நடைமுறைப்படுத்திய போதிலும் விபத்துக் களின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளும் அதிகரித்தே செல்கின்றன. இலங்கையில் வீதி விபத்துக்கு உள்ளாவோ ரில் மூன்றில் ஒரு பங்கினர் பாதசாரிகளாக உள்ளனர் என புள்ளி விபரங்கள் காட்டிநிற்கிறது.

மதுபோதையில் வாகனம் செலுத்துதல், வாகனம் ஓட்டும்போது கையடக்க தொலைபேசிப் பாவனை, தலைக்கவசம் மற்றும் இருக்கைப் பட்டிகள் அணியாமை, போக்குவரத்து விதிமுறைகளை மீறல், வேகமான பயணம் அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் ஓட்டுதல் மற்றும் இரவு

பகல் பாராது கண்ணயராது வாகனத்தைச் செலுத்துதல் போன்ற காரணங் கள் வாகன விபத்தின்போது செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணி களாக அமைகின்றன.

சில சாரதிகள் ஏனைய வாகனங்களுக்கு இடம்கொடுக்காமல் விரைந்து செல்ல முயற்சிப்பது, சாரதிகளின் பார்வைக் கோளாறு. இடதுபுறமாக முந்திச் செல்லல் போன்றவையும் அதிகளவான விபத்துக்கு காரணமாக அமைகிறது. முக்கிய நகரங்களில் அதிகமான வீதிச் சமிக்ஞை விளக்கும், சில முக்கியமான சந்திகளில் கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப் பட்டிருந்தாலும், இவற்றை சில சாரதிகள் கவனத்தில் கொள்வதில்லை. வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகள், நாய்களும் அதிகளவான விபத்து ஏற்பட காரணமாகின்றன.

பொலீஸ்துறையினரிடம் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக மட்டுமே தலைக் கவசம் அணிகின்றவர்களையும், நாம் கண்டிருக்கின்றோம். ஆனால், ஒரு விபத்து நிகழும்போது, தலைக்கவசம் அணிந்து செல்லும் மோட்டார் சைக்கிள் சாரதியோ அல்லது பயணியோ உயிராபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் சாத்தியங்கள் பல மடங்கு அதிகமாக உள்ளது. அநேகமாக, விபத்தின்போது தலையில் ஏற்படும் காயங்கள் மற்றும் தலைக்குள் ஏற்படும் இரத்தக் கசிவுகள் போன்றவை உயிரிழப்புகளுக்கு பிரதான காரணங்களாக அமைந்து விடுகின்றன.

பொதுவாக வீதியில் பாதசாரிகள் செல்லும்போது, வலது புறமாகவே நடந்து செல்லவேண்டும். இதனால் எமக்கு எதிர்ப்புறமாக வரும் வாகனங்களை நாம் அவதானித்து நடக்கக்கூடியதாக இருக்கும். அதே நேரம் வாகன சாரதியும் எம்மை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இதனால் பரஸ்பரம் இருவரும் விபத்தை தவிர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் உண்டு.

அதேநேரத்தில் வீதிகளை கடக்கும்போது, வீதியின் குறுக்காக உள்ள வெள்ளைக்கோட்டில் கடக்கும்படி அறிவுறுத்தப் படுகின்றனர். ஆனால் நாளாந்த வாழ்க்கையில் இந்த நடமுறைகளை பாதசாரிகள் கைக் கொள்ளுவது மிகவும் குறைவு. வீதி போக்குவரத்து விதிகளை மதிக் காமல் நினைத்த இடத்தில் வீதியைக் கடக்கும் பாதசாரிகளும் வீதி விபத்திற்கு ஒரு காரணமாக அமைந்து விடுகின்றனர்.

வீதி விபத்துகளில் பலியாவோரில் அதிகமானோர் இளைஞர்கள் என்று

என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை கூறுகிறது. வீதி விபத்துகளினால் ஏற்படும் மரணங்களின்போது, ஒரு குடும்பம் தனது வீட்டுத் தலைவனை இழக்க நேரிடலாம். தமக்கு சம்பாதித்துக் கொடுக்கும் ஒரு சகோதரனை அல்லது சகோதரியை ஒரு குடும்பம் இழந்து தவிக்கக் கூடும். இத்தனைக்கும் ஒரு சாரதியின் அலட்சியமான நடத்தையே காரணமாக இருக்கக் கூடும்.

இலங்கையில் வீதி விபத்துக்களால் நாளொன்றுக்கு 7 பேர் மரணிக்கின் றனர். அதுமாத்திரமன்றி, ஒரு வருடத்துக்கு 2500 ற்கும் அதிகமான மனித உயிர்களை விபத்துக்களின் மூலம் இழக்க நேரிடுகின்றது. உலகமெங்கும் வருடமொன்றுக்கு 12.5 இலட்சம் பேர் வீதி விபத்துக் களால் மரணிப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனடிப்படையில் பார்த்தால் உலகில் நாளொன்றுக்கு 3472 பேர் விபத்துக்களினால் மரணமடைகின்றனர்.

உலகில் அதிகமான வீதிவிபத்துக்கள் இடம்பெறும் நாடுகளை பட்டியல் படுத்தும்போது குறைந்த, நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடுகளிலே அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெறுவது தெரியவருகிறது. இந்நாடு களில் போக்குவரத்துக்குத் தேவையான உட்கட்டுமான வசதிகள் மற்றும் சட்டதிட்டங்களைப் பேணுதல் சிறப்பாக இல்லாததே காரணம்.

விபத்துக்களை கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப் பதனூடாகவும், சட்டங்களை தராதரம் பார்க்காது நடைமுறைப்படுத்து வதன் மூலமும், பொது மக்களுக்கும், சாரதிகளுக்கும் சட்ட ரீதியான போக்குவரத்து விதிமுறைகள் பற்றி விழிப்புணர்வூட்டுவதன் ஊடாகவும் விபத்துக்களை கணிசமாக கட்டுப்படுத்தலாம்.

வீதி ஒழுங்குகளையும் போக்குவரத்துச் சட்டங்களையும் மதித்து நடக்கும் போது, வீதி விபத்துகள் பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றன. அதிகமான போக்குவரத்துச் சட்டங்கள், சாரதிகளுக்கு பாதுகாப்பாக உள்ளன. ஆனால், அவை தொடர்பில் எம்மில் அதிகமானோர் புரிந்து கொள்வதேயில்லை. இலங்கையில் போக்குவரத்துச் சட்டம் இன்னும் இறுக்கமாக்கப்பட வேண் டும் என்பது சமூக ஆர்வலர்களின் கருத்தாகவும் உள்ளது. விபத்தை நாம் சந்திக்காத வரை, அதை பெரிதாக கருதிக் கொள்வதில்லை.

தற்போது பாடசாலை மட்டத்தில் போக்குவரத்து விதி முறைகள் போதிக் கப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களே வீதி ஒழுங்கைப் பேணு வதற்கு ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். இது ஒரு ஆரோக்கியமான விடய மாகவே பெற்றோராலும், பொதுமக்களினாலும் பார்க்கப்படுகிறது.

வீதியில் விபத்து நடைபெறவில்லை என்பதை உறுதிப்படுத்திட உதவு வோம். விபத்தில் உள்ளோருக்கு உதவிடுவோம், உயிர்காப்போம். வீதிப் பாதுகாப்பே உயிர் பாதுகாப்பு.



# நான் பார்த்த திருவிழா

நான் ஜதுன். கொல்லங்கலட்டி எனது கிராமம். மகாஜனக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் படிக்கிறேன். எனது வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயத் தில் நடைபெற்ற தேர்த்திருவிழாவில் நான் பாரத்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

எனது கிராமத்தில் பல இந்துக் கோவில்கள் சிறிதும், பெருதுமாக ஆங் காங்கே இருக்கிறது. இருந்தும் எனது வீட்டிற்கு அருகில் உள்ள வீரகத்தி விநாயகர் ஆலயம் மிகப் பெரியது. இதன் சிறப்புக்களை எனது அம்மம்மா அடிக்கடி கூறுவார். திருவிழாக்கள் ஓர் இடத்தில் உள்ள மக்களின் நாகரிகம், கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை பிரதி பலிக்கின்றது என்பார்.

இவ்வாலயம் வரலாற்று சிறப்பு மிக்கதும், தொன்மையானதும் ஆகும். இதன் திருவிழா வருடா வருடம் வைகாசி மாதத்தில் நடைபெறும். ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாட்கள் நடைபெறுவது வழக்கம். திருவிழா தொடங்கினாலே கொண்டாட் டம்தான். சிறுவர், சிறுமியர் கூட்டத்திற்குப் பஞ்சமே இருக்காது. பொதுவாக திருவிழா என்றவுடன் சிறியவர், பெரியவர் என எல்லோரும் ஆர்வமாக அதனை வரவேற்க தயாராகி விடுவார்கள். புலம்பெயர் மக்களும் முன் கூட்டியே வருகை தந்துவிடுவர். அத்தனை சிறப்பு மிக்கது எமது திரு விழாக் காலம்.

அன்று தேர்த்திருவிழாவிற்கு செல்வதற்கு ஆயத்தமானேன். நான் குளித்து விட்டு வந்தவுடன், வேட்டி கட்டி, சால்வை அணிவித்து அழகு பார்த்தார் எனது அம்மா. சில நாட்கள் அம்மம்மாவுடனும், சில நாட்கள் தாத்தாவுடனும் ஆலயத்திற்கு செல்வதுண்டு. அன்று தாத்தாவுடன் தேர்த்திருவிழாவிற்கு சென்றிருந்தேன். செல்லும்போது “விளையாட்டுச் சாமான் வாங்கித் தரவேண்டும்” என்ற நிபந்தனையை தாத்தாவிற்கு கூறினேன். தாத்தாவும் சம்மதத்திற்கு அறிகுறியாக தலையை அசைத்தார்.

கோயில் எனது வீட்டில் இருந்து 300 யார் தூரம்தான் இருக்கும். எனவே நடந்தே சென்றோம். செல்லும் பாதையில் மடத்தடி சந்திக்கு அருகில் அழகான அலங்கார வளைவு அமைத்திருந்தார்கள். இந்த வளைவை கொடியேற்றத்துக்கு முன்னரே அமைத்திருந்தார்கள். தூரத்தில் இருந்து பார்க்கவே ஆலய சுற்றாடல் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆலயத்தின் பின் பக்கமாக உள்ள பிரதான வீதியின் இரு மருங்கிலும் நீண்ட தூரத்திற்கு ஒலிபெருக்கி வசதி செய்யப்பட்டிருந்தது. இந்த அலங்காரங்கள் என்னை மிகவும் சந்தோசப்படுத்தின.

ஆலயத்தின் பின்பகுதியில் பிரதான வீதி ஓரமாக இருபக்கமும் ஐஸ் கிறீம் வாகனங்கள் இரண்டு நிறுத்தப்பட்டிருந்தது. ஆலயத்தின் வடக்கு மற்றும் தெற்கு வீதியோரம் பல தரப்பட்ட கடைகளை தொடராக அமைத்திருந்தனர்.

ஆலயத்தை சென்றடைந்ததும் அங்கு பல நண்பர்கள் வந்திருப்பதைக் கண்டேன். வகுப்பு நண்பர்களும், ஊர் நண்பர்களும் நின்றிருந்தனர். எனது வருகையை அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக, சிறிது நேரம் அவர்களுடன் உரையாடிவிட்டுச் சென்றேன்.

தாத்தா தேருக்கு கிட்ட என்னைக் கூட்டிச்சென்றார். தேர் சகல வேலைப் பாடுகளுடனும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதிகமான பக்தர்கள் நாலா புறமும் திரண்டு நின்றனர். சன நெரிசலில் முண்டியடித்து செல்வது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. “தேரடிக்கு விநாயகப் பெருமானின் வருகையை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்” என தாத்தா கூறினார். இடப்பெயர்வுக்கு முன்னர் இருந்த தேர் சேதமடைந்த காரணத்தினால் புதிதாக சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய தேர் அமைக்கப்பட்ட தாகவும் அவர் கூறினார். சேதமடைந்த பழைய தேர் ஓரமாக வைக்கப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆலய தொண்டர்கள், பக்தர்களை இரு பக்கமும் ஒதுக்கி, விநாயகப் பெருமான் தேரடிக்கு வரும் வழியை ஒழுங்குபடுத்தினர். சிறிது நேரத்தில் பக்தர்களின் அரோகரா கோசம் வானைப் பிளந்தது. “விநாயகர் தேரடிக்கு புறப்பட்டு வருகிறார்” என்றார் தாத்தா. திரும்பிப் பார்த்தேன்; அழகிய மலர் வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய பீடத்தில் ஆரோகணித்து பக்தர்கள் அரோகரா கோசம் எழுப்ப, மேளவாத்தியங்கள்

முழங்க விநாயகப் பெருமான் பிரதான வாசல் வழியாக வந்து கொண்டி ருந்தார். நானும் கும்பிட்டுக்கொண்டு “அரோகரா” என்று கோசமிட்டேன். அம்மம்மாவும் ஆலயத்திற்குள் இருந்து வருவதை அவதானித்தேன். எம்பெருமான் நேரே தேர் மண்டபத்தை அடைந்து, அலங்கரிக்கப்பட்ட அழகிய சிற்பத்தேரில் எழுந்தருளினார். பக்தர்கள் தேரைச் சுற்றி நீக்கமற நிறைந்து நின்றனர். எங்கும் அரோகரா கோசம் ஒலித்த வண்ணமே இருந்தது.

குருக்கள் கிரிகைகளை நடாத்தி பஞ்சாராத்தி காட்டியபோது பக்தர்கள் உச்சிமேல் கைகுவித்து பக்தி பரவசத்துடன் வழிபட்டனர். பின்னர் தேரின் முன்னே குவிக்கப்பட்டிருந்த தேங்காய்களை பக்தர்கள் “பட பட” வென்று அடித்தனர். சிறிது நேரத்தில் தேர் இருப்பிடத்தை விட்டு மெல்ல நகரத் தொடங்கியது. நான் எனது கைக்கடிகாரத்தில் நேரத்தை பார்த்தேன். சரியாக 10.00 மணி. ஆண்கள் ஒரு புறமும், பெண்கள் ஒரு புறமுமாக நின்று வடம் பிடித்து இழுத்தனர். பக்தர்கள் வடம் பிடிப்பதற்கு ஆர்வமாக முண்டியடித்துக் கொண்டு நின்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தேருக்கு முன்னே அதிகளவான தவில், நாதஸ்வர கலைஞர்கள் இசைத்த வண்ணம் சென்றுகொண்டு இருந்தனர். தேரின் பின்னே அதிக அடியார் கள் அங்கப்பிரதட்சணம் செய்தும், அடியழித்தும், கற்பூரச் சட்டிகளை ஏந்திய வண்ணமும் சென்று கொண்டிருந்தனர். பஜனைக் குழுவினரும் பஜனை பாடியவண்ணம் பின் தொடர்ந்தனர். எங்கும் பக்திமயமான சூழ்நிலை காணப்பட்டது.

விநாயகப் பெருமானின் தேரானது தெற்கு, மேற்கு, வடக்கு வீதி வழியாக மெல்ல நகர்ந்து மண்டபத்தை வந்தடைந்தது. இந்நேரம் அம்மம்மாவும் எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார். தேர் இருப்பிடத்தை அடைந்ததும் அர்சனைக்காக காத்திருந்த அடியார்களில் சிலர் தேர் அர்ச்சனை செய்த னர். அம்மம்மாவும் அர்ச்சனை செய்வித்தார். பின்னர் குருக்களிடம் திரு நீறு, சந்தணம், பிரசாதம் பெற்றுக்கொண்டு வீடு செல்ல ஆயத்தமானோம்.

என்னிடம் “எனி என்ன வீடுதானே” என தாத்தா வினாவினார். எனது முன்னைய நிபந்தனையை தாத்தாவுக்கு நினைவுபடுத்தினேன். உடனே கடைப்பக்கமாக கூட்டிச் சென்றார். ஒவ்வொரு கடையாக பார்த்துக் கொண்டு வந்தேன். இறுதியில் கடலையும், ரிமோட்டில் இயக்கும்

மோட்டார் வாகனம் ஒன்றும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினோம். நான் பார்த்த இந்த தேர்த்திருவிழா என்றும் மறக்கமுடியாதது.

இவ்வருட திருவிழாக்களை வழமைபோன்று கொண்டாட முடியவில்லை. கொரோனா வைரசின் தீவிர பரவலின் காரணமாக, திருவிழாக்கள் முழுமையாக மௌனிக்கப்பட்டு, ஆலய உள்ளக சம்பிரதாயங்களுடன் இனிதே நிறைவுசெய்யப்பட்டது. இந்த ஆதங்கத்தினாலேயே சென்ற வருட தேர்த்திருவிழாவை ஒருமுறை மீட்டிப்பார்த்தேன்.



# முதலுதவி

இலங்கையில் விபத்துக்களால் உயிர் இழப்பவர்களில் அதிகமானோர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணி நேரத்தில் பலியாகிறார்கள். இத்தகைய விபத்தில் சிக்கியவர்களுக்கு முறையான முதல் உதவி கிடைத்திருந்தால், அவர்கள் நிச்சயம் காப்பாற்றப்பட்டு இருப்பார்கள். அந்த அளவுக்கு முதல் உதவி என்பது தேவையானதாகவும், அவசியமாகவும் இருக்கின்றது. ஆபத்தான நிலையில் இருப்பவர்களை மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லும்முன், அவர்களுக்கு தேவையான அவசர சிகிச்சையே "முதல் உதவி" எனப்படும்.

முதலுதவி வழங்குபவர் ஒரு மருத்துவராகவோ அல்லது மருத்துவர் அல்லாதவராகவோ இருக்கலாம். எனினும் பயிற்சி பெற்ற ஒரு நபரால் முதலுதவி அளிக்கப்படுவதே சிறப்பானது. சில சமயங்களில், கட்டுப்படுத்தக் கூடிய நோய்கள் மற்றும் சிறிய காயங்களுக்கு முதலுதவி அளித்த பிறகு மேலதிக மருத்துவம் தேவை இல்லாமலும் போகலாம். கூடிய விரைவில் பாதிக்கப்பட்ட நபரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 14 ஆம் திகதியை "உலக முதலுதவி தினமாக" உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆபத்தான நிலையில் இருக்கும் பொழுது, அவருக்கு எந்த மாதிரியான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இந்நாளில் செய்யப்படுகிறது. அகில உலக அளவில் முதலுதவியின் பொது சின்னமாக பச்சை பின்னணியில் உள்ள வெள்ளை குறுக்கு சின்னம் (சக அடையளம்) அங்கீகரிக்கப்பட்டது.

## குறிக்கோள்

உயிரைப் பாதுகாத்தல், கூடுதலான ஆபத்து நேர்வதை தவிர்த்தல், நிலைமை மோசமடைவதை தவிர்த்தல், சீக்கிரத்தில் குணமாவதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்தல், அழுத்தம் கொடுத்து இரத்தப் போக்கின் தீவிரத்தை தவிர்த்தல் போன்றவை முதலுதவியின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

## முக்கிய திறன்கள்

சில திறன்கள் முதலுதவி வழங்குதலுக்கு அத்தியாவசியமாக கருதப் படுறது. குறிப்பாக ஏனைய சிறு காயங்களை கவனிக்குமுன் முதலில் சுவாசவழி நன்றாக உள்ளதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும். மூச்சுக்குழலில் அடைப்பு இருப்பது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் அவசர நிலையாகும். இதன் பிறகு மூச்சு விடுவது ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்து தேவையானால் பாதிக்கப்பட்டவரை செயற்கையாக மூச்சு விடவைக்க வேண்டும். அதற்காக மார்பு அழுத்தம் தரப்படும். பாதிப்பு தீவிர நிலையில் இல்லாதவர்களிடம் நாடி சரிபார்த்தல் நடத்தப் படலாம்.

சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட படிநிலைகளை ஒரே நேரத்தில் அளிக்க வேண்டிவரும். உதாரணத்திற்கு மூச்சு மற்றும் நாடி இரண்டும் இல்லாதவருக்கு செயற்கை சுவாசம் மற்றும் மார்பழுத்தம் இரண்டை யுமே ஒன்றாக அளிக்க வேண்டும்.

முதலுதவி அளிப்பவர் வெட்டுகள், எலும்பு முறிவுகள் போன்ற காயங் களை கையாளவும் பயிற்சி பெற்றிருப்பார். இதுபோன்ற சந்தர்ப்பங் களில் இவர்கள் முழுமையான சிகிச்சையாகவும் செய்து முடிப்பர். அதாவது காயங்களுக்கு பிளாஸ்ரர் அல்லது பான்டேஜை கட்டுவதன் மூலம் இது நிறைவுபெறுகிறது. எலும்பு முறிவுகள் போன்ற சந்தர்ப்பங் களில் மருத்துவ அவசர ஊர்தி வரும் வரை அந்த முறிவை கட்டுக்குள் வைத்திருக்க முயற்சிப்பார்.

## பயிற்சி

பிளாஸ்ரர் அல்லது பான்டேஜை பாவிப்பது அல்லது இரத்தப்போக்கு உள்ள இடத்தில் நேரடி அழுத்தம் கொடுப்பது போன்ற அடிப்படை பயிற்சிகள் அன்றாட அனுபவங்கள் மூலமே கிடைக்கின்றன. எனினும், உயிரை காப்பாற்றும் முதலுதவிக்கு ஒழுங்கான பயிற்சி தேவை. இதுபோன்ற சமயங்களில் பயிற்சிபெறாத நபர் முதலுதவி தருவது, நிலைமையை மேலும் மோசமாக்கி விடக்கூடும்.

## முதல் உதவி தேவைப்படும் நிலைமைகள்


வீதி விபத்துக்கள், குண்டுவெடிப்பு, எலும்பு முறிவுகள், தீக்காயங்கள், இதயம் செயல்படாமை, மூச்சடைத்தல், குழந்தை பிறப்பு, மாரடைப்பு, மிகுந்த உதிரப்போக்கு, இரத்த சர்க்கரை மிகுதியாகவோ குறைவாகவோ இருத்தல். பூச்சி மற்றும் குளவி கொட்டுதல், நஞ்சு உட்கொள்ளல், வலிப்பு அல்லது மூளை செயலிழப்பு, நினைவிழத்தல், பக்கவாதம், காயம் மற்றும்

இரத்தப் போக்கு நிலைமைகளில் முதலுதவி தேவைப்படலாம்.

## அடிப்படை முதலுதவிக் குறிப்புகள்

- மருந்துகள், முதலுதவி வசதிகளுடன் கூடிய முதலுதவிப் பெட்டியை வீட்டிலும், பாடசாலையிலும் வைத்திருத்தல்.
- இவற்றை குழந்தைகளின் கைக்கு எட்டாத இடத்தில் வைத்தல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்யும் பொழுது முதலுதவி செய்பவரின் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ளல் அவசியம்.
- பாதிக்கப்பட்டவர் இயல்பாக மூச்சுவிடுவதற்குத் தேவையான சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதற்காக சுற்றி நிற்பவர்களை அப்புறப்படுத்த வேண்டும்.
- மிகவும் வேகமாகவும் நிதானத்துடனும் செயல்படுத்த வேண்டும்.
- முதலுதவி அளிக்கும் போதே மருத்துவ உதவிக்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டும்.
- பாதிக்கபட்டவருக்கு மனத்தைரியத்தை அளிக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நபரின் பெயர், விபரங்கள் மற்றும் அவருக்கு ஒவ்வாமை தரும் மருந்துகளின் குறிப்புகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விபத்து அல்லது நோயினால் ஆபத்திற்குள்ளான ஒருவருக்கு சரியான முறையில் முதலுதவி அளிக்க நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளல் அவசியமாகின்றது. முதலுதவி அளிக்கும் திறமை முதலுதவி பயிற்சி வகுப்புகளுக்குப் போவதில் கிடைக்கும். முதலுதவி செயல்திறன் மிக்க பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையில் பரவலாக பல அமைப் புக்கள் உண்டு.



# கொழும்பு துறைமுக நகரம்
(Colombo Fort City)

கொழும்பு துறைமுக நகரம் என்பது இலங்கையின் வணிக தலை நகரான கொழும்பின் விரிவாக்கமாக கட்டப்பட்ட நகர வளர்ச்சியாகும். இது கடலில், 269 ஹெக்டேர் (665 ஏக்கர்) பரப்பளவைக் கொண்ட இடத்தை மண்ணை நிரப்பி, அதனை புதிய நகரத்துக்கான நிலப்பிரதேச மாக மாற்றும் திட்டம். இதனால் கொழும்பு நிலப்பரப்பு இரு மடங்காக விரிகிறது.

கொழும்பு துறைமுக நகரம் கொழும்பு துறைமுகத்தின் தெற்கு கரை யோரத்திற்கும், கோட்டை கலங்கரை விளக்கிற்கும் இடைப்பட்டும், கோல்ஃபேஸ் (Galle Face) அருகிலும் கடல் பரப்பில் அமைகிறது.

தொத்தம் 665 ஏக்கர் நிலப்பரப்பில், 287 ஏக்கர் சீனா கம்யூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிக்கு (சி.சி.சி.சி) 99 ஆண்டு குத்தகைக்கு கொடுக் கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் (378 ஏக்கர்) இலங்கை அரசுக்கு சொந்த மானது, இந்த நிலம் பிரிக்கப்பட்டு 153 ஏக்கர் நிதி நகரம் ஒன்றை அமைப்பதற்கும், 225 ஏக்கர் பொது இடங்களாக பயன்படுத்தப்படுவ தற்கும் ஆகும்.

நிதியியல் மாவட்டம், மத்திய பூங்கா வாழ்விடம், சர்வதேச தீவு, மெரீனா மற்றும் தீவக வாழ்விடம் என ஐந்து அம்சங்களைக் கொண்ட ஒரு செயற்திட்டமாக கொழும்பு துறைமுக நகரம் அமையவுள்ளது. மெரினா என்பது நவீன படகுச் சேவையுடன் கூடிய கடற்கரைச் சுற்றுலா மையமா கும். கொழும்பு துறைமுக நகரத்துக்கு 2014 செப்டம்பர் 17 ஆம் திகதி சீன ஜனாதிபதி அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார். துறைமுக நகரத்தின் முதல் கட்டமான நிலப்பரப்பை அமைக்கும் திட்டம் 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கி 2019 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. இதற்கென 1.5 பில்லியன் (1,500 இலட்சம்) டொலர் ஒதுக்கப் பட்டது. 25 ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக 15 பில்லியன் (15,000 இலட்சம்) டொலர் செலவிடப்படவுள்ளது.

தெற்காசியாவிற்கான உலகத் தரம் வாய்ந்த நகரமான துறைமுக நகரம் 5.8.2019 அன்று கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டது. துறைமுக நகரம் தற்போது அதிகாரப்பூர்வமாக “கொழும்பு சர்வதேச நிதி நகரம்” (CIFC) என்று அழைக்கப்படுகிறது. இரண்டாம் கட்ட கட்டுமானத்தின் ஆரம்பத்தை குறிக்கும் ஒரு நினைவு முத்திரையும், முதல் நாள் அட்டையும் இதன்போது வெளியிடப்பட்டது, அடுத்த தலைமுறையின் எதிர்கால வாய்ப்புகளை உறுதி செய்வதற்காக கட்டப்படும் இந்த துறைமுக நகரம் இலங்கையில் மிகவும் எதிர்பார்ப்புக் குள்ளான எதிர்கால திட்டமாக கருதப்படுகிறது.

இரண்டாம் கட்டமாக 2020 ஆண்டு நடுப்பகுதியில் தொடங்கிய கட்டி டங்களின் கட்டுமானப் பணிகளின் முதல் கட்டம் 2023 இல் நிறைவடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீட்கப்பட்ட நிலத்தில் தெற்கு நுழை வாயிலில் இது கட்டப்படுகிறது. மீட்டெடுக்கப்பட்ட நிலப்பரப்பில் 225 ஏக்கர் வீதிகள், பொது இடங்கள் மற்றும் பயன்பாட்டு பகுதிகள் ஆகியவை அடங்கும். அதே நேரத்தில் சுமார் 110 ஏக்கர் பொது பூங்காக்களுக்கு ஒதுக் கப்படும். புதிய நகரத்திற்குள் நான்காயிரம் மரங்களும் நாட்டப்படும்.

துறைமுக நகரம் 2041 ஆம் ஆண்டளவில் பூரணமாக நிறைவடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முழுமையாக நிறைவடைந்ததும், துறைமுக நகரம் 5.7 மில்லியன் (57 இலட்சம்) சதுர மீட்டருக்கு மேல் நிர்மானிக்கப்பட்ட இடத்தைக் கொண்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அலுவலகங்கள், இராஜதந்திர தூதரகங்கள், சர்வதேச பாடசாலை, மருத்துவமனைகள், ஹோட்டல்கள், உணவகம், வணிக வங்கிகள், விற்பனை நிலையங்கள், கலாச்சார பூங்கா, பொழுதுபோக்கு சமூக-கலாச்சார நிறுவனங்கள், மற்றும் நீர் விளையாட்டு, பொது கடற்கரை என அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய சர்வதேச தரம் கொண்ட இடமாக மாறவுள்ளது.

இது தெற்காசியாவின் முதன்மையான குடியிருப்புக்களை கொண்டி ருக்கும். குடியிருப்புக்கள் ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் 65 மாடி களைக் கொண்டது. உலகத் தரம் வாய்ந்த வணிக மையம் மற்றும் சேவைகளுக்கான இருப்பிடமுமாகும். இலங்கையில் அன்னிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் இது ஒரு முக்கிய உந்துதலாக இருக்கும்.

சிறந்த உள்கட்டமைப்பு, நில மதிப்பு மேம்பாடு, நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் நிலையான வேலைவாய்ப்பு உள்ளிட்ட பொரு ளாதார மற்றும் சமூக நலன்களை உறுதி செய்யும். அதிக முதலீடு களை ஈர்க்கும் அதே வேளையில் 80,000 க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

துறைமுக நகரம் தெற்காசியாவிற்கான ஒரு உலகத் தரம் வாய்ந்த நகரமாகவும், மாறும் பொருளாதார மையமாகவும் கட்டியெழுப்புவதற் கான அதன் உறுதிப்பாட்டையும் கொண்டதாக அமையும். சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், கொழும்பை சிறந்த ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் மிகப் பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு திட்டமான கொழும்பு துறைமுக நகரம், பிராந்தியத்தின் முதல் நிதி நகரமென்ற சிறப்பை கொண்டிருக்கும்.

## இலங்கையின் புதிய வரைடம்

கொழும்பு துறைமுக நகரத்தின் நிலப்பரப்பை உள்ளடக்கிய இலங்கை யின் புதிய வரைபடம் 31.5.2018 அன்று வெளியிடப்பட்டுள்ளது. புதிய துறைமுக நகரை உள்ளடக்கியதால் இலங்கையின் நிலப்பரப்பு இரண்டு சதுர கிலோ மீற்றரால் அதிகரித்துள்ளது. கொழும்பு துறைமுக நகரதிட்டம், அம்பாந்தோட்டை துறைமுகதிட்டம் மற்றும் மொராகந்த நீர்த்தேக்க கட்டுமானம் ஆகியவை இலங்கையின் கடற்கரை மற்றும் நிலப்பரப்பில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு முக்கிய காரணங்கள் ஆகும்.



# பத்து அழகு

ஒரு நூல் எப்படி இருக்க வேண்டும் என்பதை நன்னூல் குறிப்பிடுகிறது. ஒரு நூல் அழகுடையதாக இருக்கவேண்டுமானால் பத்து விடயங்களை உள்ளடக்கி எழுதப்பட வேண்டும் என்று கூறுகிறது.

**பத்து அழகு (நூற்பா)**

“சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நல் மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழம் உடைத்தாதல்
முறையின் வைப்பே உலகம் மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூலிற்கழகு எனும் பத்தே.”

1. சொல்வதைச் சுருங்கச் சொல்லுதல்.
2. சுருங்கச் சொல்லிய போதிலும், படிப்பவருக்கு புரியுமாறு இருத்தல்.
3. படிப்பவருக்கு இனிமை தரும்படி சொல்லல்.
4. நல்ல சொற்களைச் சேர்த்துச் சொல்லல்.
5. இனிய ஓசை உடையதாக இருத்தல்.
6. ஆழ்ந்த கருத்துகள் உடையதாக அமைத்தல்.
7. கருத்துக்களை காரண காரிய முறைப்படி கூறல்.
8. உயர்ந்தோர் கருத்தோடு மாறுபடாமல் கூறல்.
9. உயர்ந்த பயன் தரும் சொற்களைப் பயன்படுத்துதல்.
10. விளக்கத்திற்கு ஏற்ற உதாரணங்களை அமைத்தல்.

